# திராவிடநாடு

12—6—60 | வார வெளியீடு | விலை 16 காசு




# பொன்னித்தீவின் கன்னித்தெய்வம்

மறையும் பகலவன் வானத்தே தோற்றுவித்த செந்நிறக்கறை கலையும் வேளை... மேயச் சென்ற மாடுகளின் கழுத்துகளில் கட்டியுள்ள மணிகளின் ஒலிகேட்டு மங்கையர் கூட்டம் அதுவரையில் ஆடிவந்த சொக்கட்டான் ஆட்டத்தை விட்டெழுந்து, நீராடி, நீள கூந்தலுக்கு அகிற் புகையிட்டு வாரி முடித்து, தோட்டகரத்தில் மட்டுமல்ல, எட்டி நின்று பார்ப்போரின் நாசியெல்லாம் மணக்கச் செய்யும் மல்லிகை சூடி, பஞ்சின் நிறத்தைப் பழிக்கும் மாசில்லா நெற்றியிலே 'குருதியோ' என்று காண்போரை நினைக்கச் செய்யும் குங்குமப் பொட்டிட்டு, குறும்பு தவழும் குவளை மலர் விழிகளுக்குக் கருமையிட்டு, 'வானத்தே அம்புலி வருமுன் அத்தான் வாரானோ' என்று வாயற்படிமேல் விழி வைத்து, இன்ப நினைவலைகள் விளையாடும் நெஞ்சத்தோடு வஞ்சிக்கொடியர் ஏங்கி நிற்கும் மாலை வேளை... வருவாயை

ப.உ. சண்முகம் எம்.எல்.ஏ.



கணக்கிடவும் பொருதவராய், 'அத்தான்' என அழைக்கும் திருவாயின் இதழில் நீந்தும் புன்னகையைக் காணத் துடிக்கும் கண்களுக்கு விருந்தளிக்கத் துடிதுடிக்கும் காளையர் கூட்டத்தின் கால்கள் ஓட்டமும் நடையுமாய் விட்டை நாடி வரும் இடைவேளை.....கோட்டைச்சுவர் மணியடித்ததும், உருவிய வாளோடு அரண்மனை வாயிலினைக் காவல் புரிந்த வீரர்கள் அடுத்துவந்த ஆட்களிடம் அப்பணியை ஒப்படைத்துத் தம் வீடு செல்லும் இருட்டுவேளை...வேங்கி நாட்டு அரண்மனையில் அதுவரையில் அடுத்து நடைபெற்று உருவாகிவந்த அமைச்சர் 'ஆலகாலத்தின்' சதித்திட்டம் வெற்றிக் கோலம் பூண நல்ல வேளை எதிர் பார்த்துக் காத்திருந்தது.

அரண்மனையின் அந்தப்புரத்தே சின்னஞ்சிறு கால்களிலே ஒட்டியிருக்கும் சதங்கை கொஞ்ச, சதிராட்ட பயின்றுவிட்டு, விளக்கொளியிலே இலக்கணம் பயிலக் குந்தியுள்ள தன் குலவிளக்காம் 'தேன்மொழி'யின் மதிநுட்பத்தைக் கண்டு வியந்திருந்தாள் திலகவதி. வேங்கிநாட்டு மணிமுடியின் சொத்தான தேன்மொழியை சகலகலா வல்லுனளாக்கத் திட்டமிட்டு முயற்சித்துவரும் திலகவதி அறியாள், அரண்மனையில் வளர்ந்துவரும் அபாயத்தை நடமாடும் வீணையான இவள் வருங்கால அரசி யென்று எண்ணிப் பெருமையுற்ற அந்த அபலை சிறிது நேரத்தில் ஆடிக்காற்றுப் பஞ்சாகப் போகிறாள் என்ற சேதி யார் அறிவார்?



கலைத்தாயின் வடிவாகவந்துற்ற மகளுக்கு அன்புமொழியிலே அறத்தைப் போதித்தபின், தங்கக் கிண்ணத்தே அன்னமிட்டு அமுதசேர்த்து உண்ணச்செய்து இனிக்கும் மாங்கனியை நறுக்கி, தேனிலே பழுத்துத் தேனிலே ஊறிய பலாச் சுளையையும், மரத்திலே பழுத்த கதலியையும் கொண்டுவந்து திலகவதி தன் கரத்தாலேயே, மழலைமொழியும் அந்த வாயிலே ஊட்டினாள். இடையிடையே அம்முக்கனியோடு போட்டியிடும் முத்தமிழின் வீணையிலெழும் சொத்தான 'இசைத்' தமிழில் பாடினாள். மணக்கும் அகிற் புகையின் மணம் தாளாது தள்ளாடித் தவழ்ந்தோடி நடக்கும் தென்றலிலே அவளின் இனிமையக் குரலினின்றும் எழும் இனிமை மிதந்து அந்தப்புரத்தையே இன்பபுரியாக்கியது.

மகளோடு கொஞ்சும் மன்னன் வருவான் என்ற நம்பிக்கையில் காத்து பொழுதைக் காலத்தைக் கடத்தினாள். ஆனால் சித்திரை நிலவாம் சிங்காரச்சிலை தேன்மொழி 'அப்பா வந்தால் எழுப்பம்மா' எனச்சொல்லி நித்திரைகொண்டாள்.

கடமை மறவாத தன் கணவன் வாராததற்குக் காரணம் இருக்கும் என்று நம்பி, அவன் வரும் காலடி ஓசை காதில் விழாதோ எனக் காத்திருந்தாள். வானத்து நிலவை நோக்கினாள்.....இந்த அபலையைக் காணச் சகியாமலோ என்னவோ, மேகத் திரையிட்டு தன் முகத்தை அவன் மூடிக்கொண்டான். அரண்மனையின் மாடங்களிலே அதுவரை அமைதியோடு தூங்கிக்கொண்டிருந்த புறாக்கள் 'படபட'வென்று சிறகடித்துப் பறந்தோடியதைப் பார்த்தாள்...வியப்புற்றாள்........ அப்போதும் அச்சம் அவளை அணுகவில்லை...பெருமூச்சோடு நடந்தாள் ...மரக்கிளைகளிலே உறங்கிக்கொண்டிருந்த பறவைகள் பறந்தோடின...காரணம் கண்டறியவிரும்பிச் சாளரத்து வழியாய் நோக்கினாள். ஏதோ ஓர் உருவம் மரக்கிளையினின்றும் மாடிக்குத் தாவக்கண்டாள்... அச்சங்கொண்டாள்...ஓடிக் கட்டாரி கொண்டுவந்தாள்...அதற்குள் வாயிற்படிக் கதவைத்

(13-ம் பக்கம் பார்க்க)

# இங்கே அறிவுரை கிடைக்கும்!

'எப்படி வாழ்வது என்றே தெரியவில்லை. தங்கள் அநுபவத்தைக் கூறுங்கள். கேட்டுக்கொள்கிறேன்' என்று யாராவது உங்களிடம் வந்து கேட்பதாக வைத்துக்கொள்ளுங்கள். 'இப்படியும் யாராவது கேட்பதுண்டோ? அறிவுரை சொன்னாலே கேட்காதவர்கள்தானே இருப்பர்? தாமாக வந்து அறிவுரை கேட்பவர் இருப்பரோ?' என்று எண்ணுகின்றீர்களா? அது உண்மைதான். ஆனால் தப்பித் தவறி யாராவது உங்களிடம் வந்து 'புத்திமதி' கேட்பதாகக் கற்பனைசெய்துகொள்ளுங்கள். அப்போது என்ன செய்வீர்கள்? என்ன அறிவுரை சொல்லுவீர்கள்?

'பூ!' இதுகூடவா தெரியாது—'திருக்குறளைப் படி' என்று சொல்லியனுப்புவோம்' என்று கூறுகின்றீர்கள், அல்லவா? இதை நீங்கள் சொல்லியா அவர் தெரிந்துகொள்ள வேண்டும்? திருக்குறள் படித்தால் தெளிவு பிறக்கும்; தெளிவு பிறந்தால் வழி தெரியும் என்பது உங்களிடம் அறிவுரை கேட்க வந்திருப்பவருக்கு உங்களைவிட மிக நன்றாகத் தெரியும். 'ஆயிரத்து முன்னூற்றுமுப்பது குறட்பாக்களையும்' படிப்பதைவிட நீங்கள் சுலபமாக ஏதாவது அறிவுரை கூறுவீர்களோ என்றுதானே அவர் உங்களிடம் வருகிறார். 'இதைச் செய்; அதை விடு' என்று ஏதாவது சொல்வதை விடுத்து 'திருக்குறளைப் படி' என்றால் அதிலே என்ன புதுமை இருக்கிறது?

'இதென்ன — அறிவுரை கூறுவதிலேகூடப் புதுமையா?' என்கிறீர்களா? அறிவுரை பழமையானதுதான். ஆனால் அதைக் கூறுகின்ற முறையிலே ஒரு புதுமை வேண்டாமோ? என்ன செய்வீர்கள்? ஏதாவது தெரிகிறதா?

உங்களுக்குத் தெரிகிறதோ என்னவோ, என்னிடம் யாராவது வந்து ஏதாவது 'அறிவுரை' சொல்லுமாறு கேட்டால் என்ன செய்வது என்பது எனக்குத் தெரியும். உடனே அவரை ஒரு இடத்திற்கு அனுப்பி வைப்பேன். அங்கே அவருக்குத் தேவையான அறிவுரைகள் இருக்கின்றன. 'எந்த இடம் அது?' என்றுதானே கேட்கின்றீர்கள்? உங்களுக்குக் கூட அந்த இடம் தெரியும். சொன்னால் விளங்கிக் கொள்வீர்கள்.

பஸ்! என்ன திகைக்கின்றீர்கள்? 'அறிவுரை சொல்லச் சொன்னால், அது ஒரு இடத்தில் இருக்கிறது என்கிறாய். எங்கே இருக்கிறது

**மா.கி. தசரதன்**

என்று கேட்டால், அதைச் சொல்லாமல் 'பஸ்' என்கிறாயே, என்று எண்ணுகின்றீர்களா?

ஆமாம். அறிவுரை இருக்கும் இடம் கேட்டீர்கள். நான் அதைத்தான் சொன்னேன். 'பஸ்'தான் அந்தத் திருப்பதி!

உங்களுக்கு நான் சொல்லுவதில் நம்பிக்கை இல்லை என்றால் ஒரு முறை—ஒரே ஒருமுறை—பஸ்ஸில்—எந்தப் பஸ்ஸில் வேண்டுமானாலும் சரி—ஏறி இறங்குங்கள். உங்கள் ஐயம் தீர்ந்து நான் சொல்வது உண்மைதான் என்பதை உடனே ஒப்புக்கொள்வீர்கள் — தட்டாமல் தயங்காமல் ஒப்புக்கொள்ளுவீர்கள்.

வாருங்கள் நானே ஒரு பஸ்சுக்கு உங்களை அழைத்துச்சென்று காட்டுகின்றேன்.

இதோ, ஏறுகின்றபோதே கேளுங்கள் 'நடத்தி' என்ன சொல்லுகின்றார் என்பதை "முன்னாலே போங்கள் ஐயா—முன்னாலே போங்கள்" கேட்டீர்களா? உங்களது முன்னேற்றத்திலே இத்தனை அக்கறைகொண்டவர் யாரையாவது இதுவரை கண்டிருக்கிறீர்களா? நீங்கள் ஒரு அடி முன்னால் சென்றால் இரண்டு அடி பின்னால் இழுக்கின்றவர்கள், நிற்கின்ற இடத்திலேயே குழிதோண்டுகின்றவர்கள், இப்படிப்பட்டவர்கள் மலிந்திருக்கின்றனர் நம்மைச் சுற்றி. ஆனால் இதோ ஒருவர் உங்களை, ஒருவர் 'முன்னாலே போங்கள், முன்னாலே போங்கள்' என்று ஊக்குகின்றார். நெட்டித்தள்ளுகின்றார்!

முன்னாலே வந்து உட்கார்ந்தீர். இப்போது பஸ்சை ஒரு பார்வை பாருங்கள். உங்கள் வாழ்க்கைக்குத் தேவையான அறிவுரைகள் கிடைக்கின்றனவா இல்லையா என்பதை அறிவீர்கள்!

'தயவுசெய்து டிக்கட்கேட்டு வாங்கவும்' இந்த வாக்கியத்திற்கு எவ்வளவோ பொருள் சொல்லலாம். ஒவ்வொரு சொல்லிலேயும் ஒவ்வொருமுறை அழுத்தம்கொடுத்துப் படியுங்கள். தனித்தனிப் பொருள் புலப்படுகின்றதா இல்லையா பாருங்கள். டிக்கட் வாங்க வேண்டும். அதைக் கேட்டு வாங்கவும்' என்று வலியுறுத்திச் சொல்கிறார்கள். அவர்களே கருவதற்

குக் கடமைப்பட்டவர்கள் என்றாலும், உங்களையும் 'கேட்க'ச்சொல்கிறார்கள். டிக்கட்டுக்கே இந்த விதியானல் வாழ்க்கையிலே எதுதான் கேட்காமல் கிடைக்கப்போகிறது. 'தட்டுங்கள் திறக்கப்படும்; தேடுங்கள் கிடைக்கும்' என்று சொல்லும் அறிவுரையின் நிழல் 'கேட்டுவாங்கவும்' என்பதில் இல்லையா? ஆகையால் இது பெரிய அறிவுரை தானே!

'வெளியே கையை நீட்டாதீர்' நீட்டினால் என்ன ஆகும்? எதிரில் வரும் வண்டியிலோ வேறு பொருளின் மீதோ கைபட்டு, உடைந்தாலும் உடையலாம். இது கைக்கு மட்டும் சொல்லும் அறிவுரை அல்ல. நமக்கே சொல்லிக்கொள்ள வேண்டியதுதான். பாதுகாப்பான இடத்துக்கு வெளியே, உரிமை உள்ள இடத்துக்கு வெளியே கையை நீட்டாதே—என்று எச்சரிப்பதாக இந்த வாக்கியம் இருக்கிறது அல்லவா? 'கைநீளம்' என்பதற்கு இரண்டு விதமான பொருள்கள் உள்ளன. ஒன்று கையின் நீளத்தைப் பற்றியது. இன்னொன்று பிறர் பொருள்மீது நாட்டம் செலுத்துவது—திருடும்—என்பது. 'வெளியே கையை நீட்டாதீர்' என்பது பஸ்ஸுக்கு வெளியே மட்டும் அல்ல—வாழ்க்கையிலும் ஒழுக்கத்திற்கு, உரிமைக்கு, நல்லதற்கு வெளியே கை நீட்டாதீர் என்றுதானே பொருள்படுகிறது.

'புகை பிடிக்காதீர்' ஆ! உங்கள் உடல் நலனுக்கு எத்தனை நல்ல அறிவுரை! புகை பிடிக்கும் பழக்கம் நல்லதா கெட்டதா என்பதைப்பற்றி இதழ்களில் விளக்கங்களும் மறுப்புகளும் எழுந்த வண்ணம் உள்ளன. புகைப் பழக்கம் புற்றுநோய் வரக் காரணம் என்று ஒரு சிலர் கூறுகின்றனர். அதற்கு மறுப்புக் கூறுவோர் புகை பிடிக்காதவர்க்குப் புற்றுநோய் வருவதையும் புகையிலேயே மூழ்கிக் கிடப்போர்க்கு வராததையும் சான்றுகளாகக் காட்டி வாதிடுகின்றனர். உலகமே இப்படித் தெளிவில்லாமல் இருக்கிறது. ஆனால், பஸ்ஸில் புகை பிடிக்காதீர் என்ற அறிவுரை திட்ட வட்டமாக இருக்கிறது. அதனால் புற்றுநோய் வருமோ என்று அஞ்சவேண்டியது இல்லாமற் போகிறது. அதுமட்டுமா? சிலர் தெரிந்தும் தெரியாமலும் புகை பிடிக்கவேண்டும் என்று விரும்புகின்றனர். அதனால் அவர்கள் படும் அல்லல் எத்தனை! பெரியவர்கள் இருக்கிறார்களா என்று சுற்றிலும் பார்த்துவிட்டுப் புகைப் பொருளை எடுக்கவேண்டும். எடுத்தபின் எரித்துப் புகைக்கும் போதும் அரிமா நோக்கு—அதாவது முன்னும் பின்னும் பார்த்துப் பார்த்துப் பதுங்கிப் புகையை இழுத்து வெளிவிடவேண்டும். அப்போது யாராவது வந்துவிட்டால் புகைப் பொருள் எவ்வளவு விலை உயர்ந்ததாக இருந்தாலும் அப்பால் வீசி எறிந்துவிடவேண்டும். 'துய்க்கும்போதும் துன்பம், துய்த்த பின்னும் துன்பம்' அல்லவா இந்த புகைத் துன்பம்? அதனால் துய்த்துத் துன்புறுவதைவிடத் தொடாமலே இருக்கலாம் என்கிறீர்களா? அதைத்தான் பஸ்ஸில் புகை பிடிக்காதே' என்று அறிவித்து உள்ளனர்.

'திருடர்கள் ஜாக்கிரதை,' இது இன்னொரு அறிவுரை. இந்த அறிவுரை திருடர்களுக்காகவும் இருக்கலாம்! திருடர்களே, ஜாக்கிரதையாகத் திருடுங்கள், இல்லாவிடின் கையும் களவுமாகப் பிடிபட்டுப் போவீர்கள் என்று சொல்வதாகவும் இருக்கும். அல்லது 'திருடர்கள் இருக்கலாம். உங்கள் பொருள்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்' என்று மற்றவர்க்குச் சொல்லும் அறிவுரையாகவும் இருக்கலாம். பொதுவுடைமை ஏற்பட்டு 'எல்லார்க்கும் எல்லாம்' என்ற கொள்கை நடைமுறைக்கு வரும்வரை தனிவுடைமையைத் தக்கபடி பாதுகாத்துக் கொள்ள வேண்டும் அல்லவா? அதனால் திருடர்களிடம் விழிப்பாகத்தான் இருக்கவேண்டும்.

முன்பெல்லாம் இவ்வளவுதான் இருக்கும். ஆனால் இப்போதோ இன்னொரு அறிவுரையையும் புதிதாக எழுதி வருகிறார்கள். புதிய பஸ்களில் 'ஓட்டுவார்' இடத்திற்கு அண்மையில் உள்ள இடத்தில் 'தூங்காதீர்' என்ற கொட்டை எழுத்தில் எழுதுகின்றார்கள். ஓட்டுவாருக்கு அருகில் இருந்துகொண்டு நீங்கள் தூங்கினால், அந்தத் தொத்து நோய் ஓட்டுவாருக்கும் ஒட்டிக்கொண்டுவிடும். அவருக்குத் தூக்கம் வந்துவிட்டால்... நடப்பதை எப்படிச் சொல்லமுடியும்! அதனால்தான் 'தூங்காதீர்' என்று கூறுகின்றார்கள். ஆனால் அது பஸ்ஸில் மட்டும் கடைப்பிடிக்க வேண்டிய அறிவுரையாக எனக்குத் தோன்றவில்லை,

வாழ்க்கை முழுதும் போற்றிக் கொள்ளவேண்டியதொரு அறிவுரை அல்லவா அது? 'தூங்காமை, கல்வி, துணிவுடைமை' இம்மூன்றும் நிலன் ஆள்பவர்களுக்கு நீங்காது இருக்கவேண்டும் என்கிறாரே வள்ளுவர். தூங்கினால் என்ன ஆகிறது. விரைந்து ஓடும் வல்லமை உள்ள முயல் தூங்கினால் ஊர்ந்து செல்லும் ஆமைகூட அதை வென்றுவிடுகிறது! 'தூங்கியவன் கன்று செத்த கன்று' ஆகிவிடுகிறது! கயிறு திரிப்பவர்கள்—நார்கொண்டு திரிக்கும் கயிறுதான்—யார் தூங்குகிறார்கள் என்று பார்த்து அவர்கள் தொடையிலே பாயத் திரிக்கத் தொடங்கிவிடுகிறார்கள். அதனாலேதான் 'தூங்காதே தம்பி, தூங்காதே' என்று பஸ்ஸில் எழுதிவைத்திருக்கிறார்கள். இவ்வளவு நீளமாக எழுத இடம் இல்லாததால் 'தூங்காதீர்' என்று ஒரே சொல்லில் அடித்துச் சொல்லுகின்றனர்.

'புட்போர்ட்டில் நிற்காதீர்' 'ஓடும் பஸ்ஸிலிருந்து இறங்குவது ஆபத்து' என்றெல்லாம் இன்னும் எத்தனையோ அறிவுரைகள் இருக்கின்றன. அவை ஒவ்வொன்றும் ஒரு பெரிய தத்துவத்தை உள்ளடக்கியவை என்பது என் எண்ணம்!

ஆகையால் யாராவது உங்களிடம் வந்து 'அறிவுரை' வேண்டும் என்றால் தயங்காமல் சொல்லுங்கள்: "பஸ்ஸில் ஏறி இறங்கு" என்று. "இடம் கிடைக்குமோ?" என்று அவர்கள் திருப்பிக்கேட்டால் என்ன சொல்வது என்கிறீர்களா! அதற்கு நான் என்ன செய்வது!


## விற்பனையாளர்களுக்கு

ஏஜண்டுத் தோழர்கள் தங்கள் பட்டியல் பாக்கியை ஒவ்வொரு மாதமும் 5-ம் தேதிக்குள் தவறாது அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

பொறுப்பாளர்,
'திராவிட நாடு'

காஞ்சீபுரம்

12—6—60.

# தம்பி !

'சர்வாதிகார ஆட்சி' என்று கூறினாலே, எல்லோருக்கும் ஒரு வெறுப்பு, பயம், உடனடியாகத் தோன்றிவிடுகிறது. ஏன் வெறுப்பும் பயமும் இருக்கவேண்டும் என்று விளக்கிக்கூற, வாதாட, காரணம் காட்டக்கூடத் தெரியாமலிருக்கும்; ஆனால் சர்வாதிகார ஆட்சி கூடாது என்று மட்டும் அனைவரும் கூறுவர். எதை எப்படி எப்போது செய்வது என்பதுபற்றி, மற்றவர்களிடம் கலந்து பேசவேண்டிய கட்டாயமின்றி, மாற்று யோசனைகளை அலசவேண்டிய அவசியமின்றி, ஒரு புதிய வரி போடுவதாயினும், சட்டம் இயற்றுவதாயினும் ஊர் அமைப்பதாயினும், படைதிரட்டுவதானாலும், போர் தொடுப்பதானாலும், தொழிற்கூடம் அமைப்பது என்றாலும், எந்தக் காரியம் செய்வதானாலும், தன் இச்சையாகச் செய்திடும் நிலையைப் பெற்று, அந்த நிலையினின்றும் தன்னை நீக்கத்தக்க சக்தி ஏதுமின்றி அழித்தொழித்து, கேட்பாரற்ற நிலையில் எல்லா நடவடிக்கைகளையும் செய்திடுபவராகிவிடும் நிலைதான் சர்வாதிகாரம்; எல்லா அதிகாரமும் ஒரே இடத்தில் குவிந்திருக்கும் நிலை.

இது ஏன் ஒருவிதமான வெறுப்புணர்ச்சியையும் அச்சத்தையும் மூட்டிவிடுகிறது?

ஒவ்வொருவருக்கும், குறிப்பிட்ட அளவில் அறிவாற்றலும் [illegible] செயல் திறனும் உண்டு, என்ற நம்பிக்கை இருக்கிறது.

எதையும் செய்திடாமல்கூட இருக்கக்கூடும்—வாய்ப்புத் தேடிக் கொள்ளாமலும் இருந்துவிடக்கூடும்—ஆனால் முடியும், அதற்கேற்ற அறிவாற்றல் உண்டு என்ற நம்பிக்கை மட்டும் எவருக்கும் இருக்கத்தான் செய்கிறது.

எனவே, ஒருவன் கிளம்பி, உச்சியில் உட்கார்ந்துகொண்டு, நீவிர் ஏதும் செய்யத்தெரியாதவர்! என்ன செய்யவேண்டும் என்பதும் அறியாதவர்! உமக்கான தனைத்தையும் நானே செய்வேன். எனக்கே, தெரியும் உமக்காக என்னென்ன செய்யவேண்டும் என்பது...! என் அறிவாற்றல், உம்மில் எவருக்கும் இல்லை! எனவே, என்னிடம் விட்டு விடுங்கள் எல்லா அலுவல்களையும். நான் பார்த்துக்கொள்கிறேன். என்று கூறும்போது, தமது உரிமை பறிக்கப்படுகிறது என்ற எண்ணமும், தமது தன்மானம் அழிக்கப்படுகிறது என்ற எரிச்சலும், ஏற்பட்டுவிடுகிறது—என்ன தலைக்கனம் இவனுக்கு! எல்லாம் தெரியுமாம் இவனுக்கு—ஏதும் அறியோமாம் நாம்! நாமென்ன, இவனைப்போன்றே ஆறறிவுடையோரல்லவா! ஆற்றல் என்பது இவனோடு நின்றுவிடுவதோ! நாம், வெறும் மரக்கட்டைகளோ!! நாம் வெறும் பிறவிகளா! இவன் ஆளப்பிறந்தவனோ!!—என்றெல்லாம் பேசிடத்தோன்றுகிறது.

# ஜனநாயகச் சர்வாதிகாரி!

அவன் வீரன்!—என்று கூறினால், நான் என்ன கோழையா? என்று கோபித்துக் கேட்டிடச் சொல் கிறது உணர்ச்சி.

அவன் அறிவாளி!—என்று கூறினால், நான் முட்டாள் அல்ல! என்று கொதித்தெழுந்து கூறத் தோன்றுகிறது.

அவ்விதமின்றி, உனக்காக அவன்! உனக்கு வேறு அலுவலிருப்பதால், அவன்! உன் அனுமதி பெற்று, அவன்! உன் காரியத்தை-உன் விருப்பமறிந்து, உன் யோசனைப்படி செய்து கொடுக்க, அவன்! — என்று கூறினால், கேட்பதற்குக் களிப்பும் பெருமையும் ஏற்படுகிறது.

'எல்லாம் செய்திடுபவன்' எதை எதைச் செய்திடுவானோ! அவன் செய்திடுவதிலே, எதெது கேடு தருமோ, என்று எண்ணும்போது, அச்சம் ஏற்படுகிறது. எதையும் செய்திடுவோனானவிட்ட பிறகு, கேடு பல செய்து, இது ஆகுமோ என்று கேட்டிடின், "யார் நீ இதைக் கேட்க? நானன்றோ காரியமாற்ற வேண்டியவன்! காரணம் காட்டவா, இருக்கிறேன்!" என்று கொக்கரித்துக் கொடுமை செய்திடின் எதையும் செய்திடும் இடமேறிவிட்டவனிடமிருந்து, எப்படித் தப்பித்துக்கொள்வது?"என்று எண்ணும்போது அச்சம் எழத்தானே செய்யும்.

அடுப்புக்குள் இடும் நெருப்புக்கும், அடுப்புக்குத் தேவை என்பதற்காக கூரையில் செருகிவைக்கும் கொள்ளிக்கட்டைக்கும் வித்தியாசம் இல்லையா?

சர்வாதிகாரம் — என்றவுடன் கொதித்தெழும் போக்கு எத்துணை பரவலாகச் சமுதாயத்திலே இருப்பினுங்கூட, இன்று உலகிலே பல்வேறு நாடுகளிலே, சர்வாதிகாரிகளின் அமுல் இருந்து வருகிறது.

சில சர்வாதிகாரிகள் பத்தாண்டு இருபதாண்டு காலகக்கூடப் பீடத்தில் உள்ளனர்.

நாட்டுக்கு வெளியிடத்திலிருந்தோ, உள்ளேயிருந்தோ பேராபத்து ஏற்பட்டுவிடக்கூடும் என்று கிலி கொள்ளும்படி மக்களை ஆக்கிவைத்துவிட்டு, 'எல்லா அதிகாரமும் என்னிடம் இருக்கட்டும், ஆபத்தைப் போக்க!' என்று பேசிச் சர்வாதிகாரிகளானோர், இனி ஆபத்து இல்லை! சர்வாதிகாரம் வேண்டாம்! ஜனநாயகம் மலரட்டும்! என்று அறிவிப்பது, மிக மிகக் கடினம்.

ஸ்பெயின் நாட்டிலேயும் போர்ச்சுகல் நாட்டிலேயும், சர்வாதிகாரிகளாகிவிட்ட பிரான்கோவும், சலாசரும் என்றென்றும் சர்வாதிகார முறைதான் இருந்திட வேண்டும் என்று அந்த நாட்டு மக்கள், எண்ணிக் கிடந்திடவேண்டிய முறையில், சூழ்நிலையை உண்டாக்கி வைத்துவிட்டனர்.

சர்வாதிகாரம்--ஜனநாயகம் சாதிக்காதவைகளைச் சில வேளைகளில் சாதித்தளிக்கக்கூடும்.

வெளிநாட்டானை விரட்டியும், உள் நாட்டிலே கொடுமையாளரை அடக்கியும் பெறும் வெற்றி, புதிய சமுதாய அமைப்பு, தொழில் வளர்ச்சி, செல்வ வளர்ச்சி என்பனபோன்ற வெற்றிகள் ஒளிவிடத்தக்க விதமான ஆட்சி நடத்திடக்கூடும்.

ஆனால், அங்கு ஒன்று அழிக்கப்பட்டுவிடுகிறது—மனிதனின் சுய சிந்தனை. சிந்திக்கும் திறனை இழந்துவிட்ட பிறகு, எதுவெற்றி எதுவேதனை? எதுமுறபோக்கு? எதுபிற்போக்கு? என்பதைக்கண்டறியும் ஆற்றலும் அற்றுப்போய், அதை எடுத்துக்காட்டக்கூட, ஆட்சியினரை எதிர்பார்த்துக்கிடந்திடவேண்டியவராகின்றனர்.

இட்லரின் ஜெர்மனியில் இந்த நிலைதான் கப்பிக்கொண்டிருந்தது.

இட்லர் பார்த்து, இதுதான் இனிக்கும் என்றால், 'ஆம்' என்று நாட்டினர் அனைவரும் கூறினர்; ஒரு சிலருக்கு, 'கசப்பு' தெரிந்தாலும், அது தமது குற்றம். பொருளின் குற்றமல்ல என்று கருதினர்.

அந்த அளவுக்கு, மக்களின் எண்ணத்தைக் கட்டிப்போட்டு வைத்துவிட இட்லரின் முறைகள் மெத்தப் பயன்பட்டன.

இருபத்து நான்கு மணிநேரமும், இட்லரின் பிரச்சார இயந்திரம்—பேச்சாளர்—ரேடியோ—பத்திரிகை—கலைத்துறை—மக்களுக்கு எண்ணங்களை உருவாக்கித் தந்துகொண்டிருந்தன.

தொடர்ந்து, திறமையுடன் இந்த முறை கையாளப்பட்டு வந்ததால், மக்கள், எதைப்பற்றியும் தாமாக எண்ணிப் பார்த்திட முடியாத நிலையைக் கூடப் பெற்றுவிட்டனர்.

தம்பி! எண்ணிப் பார்ப்பது இயல்பு. அந்தத் திறம் வளரவும், தெளிவும் பயனும் ஏற்படவும், எண்ணத்திலே வளர்ச்சி காணவும், எண்ணிக் கொண்டு மட்டும் இருந்தால் போதாது!

தாயின் மடியிலே தவழும் குழந்தைக்குக்கூட, ஒரு பொருளைக் காணும்போது, எண்ணம் எழத்தான் செய்யும். பசிக்கிறது என்ற உணர்வு, புசிக்கவேண்டும் என்ற எண்ணத்தை உண்டாக்காமலிராது! குழந்தையின் அழுகைதான் அதற்கான அறிவிப்பு.

ஏற்படும் எண்ணத்தை எடுத்துக்கூற வழி ஏற்படவேண்டும், கூறுவதைக் கேட்டிடத் தன்போன்றார் இருக்கவேண்டும், அவர்கள் அதைக் கேட்டுத், தமது கருத்தினைக் கூறவேண்டும், இரு கருத்துக்களும் ஒன்றோடொன்று தழுவியோ மோதியோ, புதுப்புதுப் பொலிவு பெறவேண்டும்—எண்ண வளர்ச்சி அப்போதுதான் ஏற்படும்.

## கருத்து வளர்ச்சிக்கு, பேச்சு உரிமை இன்றியமையாததாகிறது.

சர்வாதிகாரமுறை, இந்த உரிமைகளை மறுத்து விடுகிறது.

சமுதாயத்துக்கு இதன் பயனாக ஏற்படும் நஷ்டம், சர்வாதிகாரி பெற்றளிக்கும் எத்தகைய வெற்றியும் ஈடுசெய்ய முடியாததாகும்.

உள்ளத்தில் தோன்றுவதை எடுத்துரைப்பதும், உண்மையைக் கண்டறிய ஒருவருக்கொருவர் உரையாடிக்கொள்வதும், சர்வாதிகாரத்தை ஒழித்துக்கட்டும் அறிவாற்றலைக் கொடுத்துவிடும் என்ற அச்சம், சர்வாதிகாரிகளுக்கு.

எனவே, அவர்கள், தாக்கப்படுமுன் தாக்கிவிட வேண்டும், அழிவைத் தடுத்துக்கொள்ள அழித்திட வேண்டும்—முதல் தாக்குதல் நம்முடையதாக இருக்க வேண்டும்—கொடுக்கும் தாக்குதல், அவனைப் பிறகு எழுந்து நின்று, திருப்பித் தாக்கிடும் சக்தியில்லாதவனாக்கிடத்தக்கதாக இருக்கவேண்டும் என்றஎண்ணம் கொண்டுவிடுகின்றனர். கொடுமை புரியத் துளியும் கூசாத தன்மை சர்வாதிகாரிக்கு ஏற்பட்டுவிடுகிறது.

தம்பி! சட்டம் வேண்டாம், என் சொல் போதும்! வழக்கு மன்றம் வேண்டாம், என்முன் கொண்டு வந்து நிறுத்துங்கள் போதும்! என்று கூறிக், கொடுமை அப்பட்டமாகத் தெரியும்படி நடந்து கொள்ளும் சர்வாதிகாரிகள் உண்டு.

சட்டம், வழக்குமன்றம், வழக்கறிஞர், நீதிபதி, விசாரணை—எனும் முறைகளை அப்படியே வைத்துக் கொண்டு எல்லாவற்றையும் தன் இச்சைப்படி ஆட்டி வைக்கும் 'முறை'யைப் புகுத்தி, சர்வாதிகாரம் செய்வோரும் உண்டு.

முன்னவரைவிட இரண்டாமவர், மிக்க ஆபத்தை மூட்டுபவராவார்.

என்ன அண்ணு! ஏதோ வழக்குக் குறித்துக் கூறப்போவதாகச் சென்றஇழமை கூறினுய்; இப்போது ஏதோ, சாய்வு நாற்காலிக்காரர்போல அரசியல் முறைபற்றிய ஆய்வுரை பேசுஇருயே, என்று கேட்கிருயா, தம்பி! வழக்குமன்றம் நோக்கித்தான் நடக்கிறோம். வழியில் இதைக் கூறினுல், போகிற இடம் புரியும் என்பதற்காகச் சொன்னேன்.

'இரண்டாமவர்' என்றேனே அப்படிப்பட்ட 'சர்வாதிகாரி'யின் பிடியில் உள்ள நாடு! அந்த நாட்டு வழக்குமன்றத்திலே, ஒரு வழக்கு நடைபெறுகிறது. காண்போம், வா.

வழக்குமன்றம், இருக்கவேண்டிய முறைப்படி தான் இருக்கிறது.

பெருநெருப்பு நீதிபதியாகவும், கொடுவாள் போலீஸ் அதிகாரியாகவும், அரிவாள் வழக்கறிஞராக ராகவும், இல்லை!

சட்ட நுணுக்கம் தெரிந்து, நீண்டகாலம் வழக்காடித் திறம்பெற்ற பழுத்த அனுபவசாலிதான், நீதிபதி இருக்கையில், அமர்ந்திருக்கிருர்.

அவருடைய சட்ட அறிவு நாடு அறிந்ததாகும். பல சிக்கலான வழக்குகளிலே, நல்ல தீர்ப்புத் தந்து நற்பெயர் எடுத்தவர்.

மற்ற மற்றவரும் அதுபோன்றே—கற்றறிவாளர்.

நீதிபதி அமருகிருர். மற்றவர் வந்தமருகின் றனர். போலீஸ் அதிகாரி நின்றுகொண்டிருக்கிருர்.

நீதி:- கைதியைக் கொண்டுவா.

[போலீஸ் அதிகாரி வணக்கம் செலுத்திய படி]

போலீ:- அங்ஙனமே, பெருந்தகையே!

[போலீஸ் அதிகாரி வெளியே செல்கிருர்,]

[நீதிபதியின் மேஜைமீதுள்ள டெலிபோன் மணி ஒலிக்கிறது. நீதிபதி, டெலிபோனை எடுத்துப் பேசுகிருர், பேசுபவர் யார் என்று தெரிந்ததும், முகமே மாறிவிடுகிறது; பரபரப்பு அடைகிருர்; எழுந்து நிற்கிருர், மரியாதையுடன். அவர் எழுந்து நிற்பதைக் கண்டு, மற்றவர்கள் எழுந்து நிற்கிருர்கள்]

[தம்பி! நிலைமை புரிகிறதா! அச்சம் தயை தாட்சணியத்துக்குக் கட்டுப்படாமல், சட்டத்தின் துணையையும் தன் அறிவையும் கொண்டு, வழக்கினை விசாரித்து நீதிகண்டு, தீர்ப்பளிக்க வேண்டிய நிலை பெற்றவர் நீதிபதி.

ஆண்டியாயினும் ஆறடுக்கு மாடியில் வாழ்வோனுயினும், அவர் அலட்சியம் காட்டவோ, அச்சம் கொள்ளவோ கூடாது.

அவர் அமர்ந்திருக்கும் இடம், அனைவருக்கும் நியாயம் கிடைக்கச் செய்யும் திருக்கோயில்.

அங்கு அமர்ந்திருக்கும் நீதிபதி, டெலிபோன் ஒலி கேட்டதும், பேசுபவர் யார் என்று பார்க்கிருர்; பேசுபவர் எவர் என்று தெரிந்ததும், பீதி ஏற்படுகிறது. தேவையற்ற முறையில், பணிந்துவிடுகிருர்.

வழக்குமன்றங்கள், என்ன போக்கிலே உள்ளன என்பதை நீதிபதியின் நடவடிக்கை எடுத்துக் காட்டுகிறதல்லவா?

பயம் பிடித்தாட்டுகிறது நீதிபதியை. அவரைப் பயங்காட்ட எதிரில் வந்துகூட அல்ல—எங்கோ இருந்துகொண்டு—பணிய வைக்கும் அதிகாரம் படைத்தவர் ஒருவர் இருக்கிருர்.

குற்றம் என்ன [illegible] தான் [illegible] கண்டறிந்து கூறினவர்கள்? சான்றுகள் யாவை? இது குறித்துச் சட்டம் கூறுவது யாது? குற்றவாளி என்பவனுக்காக வாதாட வந்தவர் என்ன கூறுகிருர்? • என்ற இவைபற்றி, நீதிபதி அக்கரைகாட்டவேண்டும். அவருக்கு வழிகாட்ட, சட்டம்! ஆனல், சட்டத்தைப் பார்க்காமுன்பே, வேருெர் 'சக்தி' டெலிபோன் மூலம் பேசுகிறது; நீதிபதி நடுங்கி நிற்கிருர்!.]

நீதிபதி:- (பணிவாக) ஆமாம் மேன்மைதங்கியபிரபுவே, வழக்கு ஆரம்பமாகப்போகிறது. நான் அவன் குற்றவாளி என்று கண்டறிந்து கூறி, அவனுக்கு மரணதண்டனை விதிக்கிறேன்—நிச்சயமாக, விரைவில்.

[டெலிபோனைக் கீழேவைக்கிருர். அமருகிருர். மற்றவர்களும் அமருகின்றனர்.]

[கவனித்தாயா, தம்பி! 'வழக்கை விசாரிக்கிறேன்.'

குற்றம் செய்தவன் என்பது எடுத்துக்காட்டப்பட்டுவிட்டால், தண்டனை தரப்படும் என்று கூறவில்லை.

குற்றவாளி என்று கூறுகிறேன்! மரணதண்டனை தருகிறேன்!! என்று அறிவிக்கிருர்.

குற்றவாளி, கூண்டுக்குக் கொண்டுவரப் படப்போகிருன், இதற்குள், அவனுக்கு மரண தண்டனை தந்துவிடுவதாக, நீதிபதி, வாக்களிக்கிருர்—பணிவுடன்.

ஏன்? டெலிபோனில் பேசியவரின் குறிப்பறிந்து நடந்திடவேண்டும் என்று நீதிபதி; உணருகிருர்.

தன்னை ஆட்டிப்படைக்கும் அதிகாரம்பெற்ற ஒருவர் இருப்பதை அறிகிருர், அச்சப்படுகிருர்.

ஊருக்காக உலகத்துக்காக ஒப்புக்கு ஒரு விசாரணை ஏற்பாடாகி இருக்கிறதேயொழிய; குற்றவாளி என்று கொண்டுவரப்படுபவன் கொல்லப்படவேண்டியவன் — என்பதை, டெலிபோனில் பேசும் 'மேலவர்' தெரிவிக்கிருர்.

அவர் மனமறிந்து நடப்பதற்கே, இவர் நீதிபதியாக இருக்கிருர் நிலைமை புரிகிறதா!]

(பத்திரிகைக்குக் குறிப்பெடுத்தனுப்புபவர் ஒருவர், அங்கு இருக்கிருர். அவருடைய மேஜைமீது உள்ள டெலிபோன் ஒலி கிளப்புகிறது.)

குறிப்:- பெருந்தகையே! டெலிபோனில் பேச, அனுமதி தரவேண்டுகிறேன்.

நீதி:- சரி. பேசலாம்.

குறி:- வணக்கம்! வணக்கம்! நான்தான்! குறிப்பெடுப்போன். செய்தியா? நாடு கூர்ந்து கவனித்து வரும் பரபரப்பூட்டும் வழக்குத் தொடங்க இருக்கிறது. மிக்க அனுபவம் பெற்றவர், ஆற்றல் மிக்கவர், அரசுக்கு ஆருயிர்த் தோழராக இருக்கும் அறிவாளர், வழக்கை நடத்திக், குற்றவாளிக்கு மரணதண்டனை தரத் தீர்மானித்து விட்டார். விசாரணையா? இப்போது ஆரம்பமாகப் போகிறது. குற்றவாளியா? இன்னும் வரவில்லை. போலீஸ் அதிகாரி போயிருக்கிருர், கொண்டு வர. மரணதண்டனை—நிச்சயமாக. நீதி நிலைக்கும்—கட்டாயம்.

[பத்திரிகைக்கு, வழக்கின் முடிவுபற்றி, வழக்குத் தொடங்குமுன்பே, குறிப்பெடுப்போர், செய்தி அனுப்பிவிடும், வேடிக்கையைக் கவனித்தாயா, தம்பி!]

(போலீஸ் அதிகாரி, குற்றவாளியை இழுத்துக் கொண்டு வருகிறார். குற்றவாளி வருகிறான் என்று தெரிந்ததும் நீதிபதி, சுற்றுமுற்றும் பார்க்கிறார்; பரபரப்படைகிறார்; பயம்கொள்கிறார்.)

போலீ:- பெருந்தகையே! இதோ, கைதி.

நீதி:- இரு! இரு! பாதுகாப்புப் பலமாக இருக்கிறதல்லவா?

போலீ:- ஆமாம், பெருந்தகையே! போலீஸ்படை அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. கூரைமீதும் சுவரோரங்களிலும் சுழல் துப்பாக்கிகள் வைக்கப்பட்டுள்ளன.

நீதி:- கைதியின் கரங்களுக்கு விலங்கிட்டீர்களா...?

போலீ:- ஆமாம்......ஆனால்......

நீதி:- ஆனால்...என்ன இழுத்துப் பேசுகிறாய், சொல்! சொல்!

போலீ:- கரங்களில் விலங்குமாட்டப்பட்டிருக்கிறது—பலமான விலங்குகள். ஆனால், என்ன மாயமோ தெரியவில்லை, விலங்குகள் எப்படியோ, கழன்று நழுவிவந்துவிடுகின்றன.

நீதி:- கண்காணிப்பாக இருக்கவேண்டும்; தெரிகிறதா; அவன் கரத்திலிருந்து விலங்கு கழன்றால், உன் உடலிலிருந்து சிரம் கழன்று கீழே விழும்!

[நீதிபதியின் நடுக்கம்; அவர் பேசக்கேட்டதும் போலீஸ் அதிகாரிக்கு ஏற்பட்டுவிடும் ஒடுக்கம், தெரிகிறதல்லவா? போலீஸ் அதிகாரியை நீதிபதி மிரட்டுவதிலே, நகைச்சுவை காண்கின்றனர், வழக்குமன்றத்திலுள்ளோர். சிரிக்கின்றனர், அவர் காதுபடப் புகழ்கின்றனர்; சிக்கலான வழக்கை விசாரிக்கும்போதுகூட, நகைச்சுவையைக் காட்டிடும் திறனை, நமது நீதிபதி இழந்துவிடுவதில்லை, என்கிறார், ஒருவர்.

பேரறிவாளரின் இயல்பே, அதுதானே என்று பாராட்டுகிறார், மற்றொருவர்.

ஏதேது, இதை எல்லாம்கூடப் பத்திரிகையிலே வெளியிட்டு விடுவீர்கள் போலிருக்கிறதே என்று தூண்டுகிறார், நீதிபதி — ஆசையைக் கேள்வியாக்கிப் பேசிக்காட்டுகிறார்.

ஆமாம்! பத்திரிகையில் வெளிவரும் என்று வாக்களிக்கிறான் குறிப்பெடுப்போன்.

குற்றவாளி, கூண்டிலே நிறுத்தப்படுகிறான். நடுத்தர வயதினன்—எந்தக்கேடும் செய்திட இயலாதவன் என்பதைத் தோற்றமே காட்டுகிறது. புன்னகை செய்கிறான் ]

நீதி:- குற்றவாளியைச் சோதனை செய்தாகிவிட்டதா?

போலீ:- ஆமாம்......

நீதி:- எப்போது நடத்தினீர்கள், சோதனை?

போலீ:- தொடர்ந்து! விடாமல்!! மணிக்கு ஒருதடவை விதம்!

நீதி:- ஆயுதம் ஏதும் வைத்துக்கொண்டில்லையே...... இருந்ததா?

போலீ:- தேடினோம் — கிடைக்கவில்லை. ஆனால், அவனே கூறுகிறான், ஆயுதம், அவன் தலையில் இருக்கிறதாம—மண்டைக்குள்!!

[போலீஸ் பக்கத்திலே நின்று காவல் புரிகிறது.

கூண்டிலே, குற்றவாளி நிற்கிறான். என்ன நடந்தாலும் கவலையில்லை என்ற போக்கில்.]

[குறிப்பெடுப்போன், தன் இதழுக்கு அறிவிக்கிறான்.]

குறி:- (டெலிபோன் மூலம்) மயிர்க்கூச்செறியும் காட்சி பேயன், பிடித்திழுத்து வரப்பட்டிருக்கிறான். கூண்டிலே நிற்கிறான் கொடியவன்!! பயங்கரமான தோற்றம். ஆனால் கடமையைக் கலங்காது செய்திடும் நீதிபதி, கைதிக்கூண்டில், தனக்கு மிக அருகாமையில், அந்தக் கொடியோன் இருப்பினும், துளியும் கலங்காது, அமர்ந்திருக்கிறார் அவருடைய அஞ்சா நெஞ்சம் கண்டு அவனி புகழ்கிறது.

நீதிபதி:- (வழக்கினைத் தொடுத்திடும் வழக்கறிஞரைப் பார்த்து) இனித் தொடங்கலாம்...

தொடுப்:- பெருந்தகையே! இவன் மீது சாட்டப்பட்டுள்ள குற்றம், எவ்வளவு கொடியது, ஈனத்தனமானது, ஆபத்தானது, அழிவு தருவது என்பதைத் தாங்கள் அறிவீர்கள்.

நீதி:- குற்றம் கொடியதே! அறியாதார் யார்?

தொடுப்:- சட்ட நிபுணர் தாங்கள்! நீதியின் காவலர் தாங்கள் அறியாததும் உண்டோ?

நீதி:- இவன் செய்த குற்றம்?

தொடுப்:- சுயசிந்தனை! தானாகச் சிந்திக்கிறான்! எண்ணிப் பார்க்கிறான்!!

[நீதிபதி கடுங்கோபங் கொள்கிறார். வழக்கு மன்றத்திலிருப்போர், பதறுகிறார்கள். பெண்கள் பீதி அடைகிறார்கள்; ஆடவர் ஆத்திரமடைகிறார்கள். குற்றவாளியைச் சுட்டுத்தள்ளுவது போலப் பார்க்கிறார், நீதிபதி ]

நீதி:- சுயசிந்தனையா! உம்! எப்போது, அப்படிச் சிந்திக்கிறான் இந்தச் சண்டாளன்.

தொடுப்:- எப்போதும் அதே வேலைதான், இந்த அக்ரமக்காரனுக்கு. வீட்டில், தொழிற்கூடத்தில்! பத்திரிகை படிக்கும்போது!

நீதி:- அதிலே எழுதப்பட்டிருப்பதை நம்பவில்லை—யோசிக்கிறான்—எண்ணிப்பார்க்கிறான்!

தொடுப்:- அதுமட்டுமல்ல! நமது புனிதத் தலைவர்கள் சொற்பொழிவு மூலம் உபதேசம் செய்கிறார்களே, ஊர் வாழ உலகு வாழ. அப்போதுகூட, இந்த அயோக்யன், அவர்கள் கூறுவது, சரியா, தவறா? என்று யோசிக்கிறான்.

நீதி:- கேட்டீர்களா, கற்றறிந்தோரே! வழக்கினைத் தொடுத்து, விளக்கம் எடுத்துரைக்கும் நண்பர், வம்புதும்பு பேசுபவர் அல்ல—வழக்கறிஞர்—திறமை மிக்கவர். சான்றுகளின்றிப் பேசமாட்டார்! பேச்சினை எவரும் மறுத்திடமுடியாது! ஆணித்திறமான பேச்சு. அவர் கூறிவிட்டார், இந்த அற்பன் செய்த குற்றத்தினை. கண்கண்ட கடவுளராம் நமது நாட்டுத் தலைவர்கள், பேசுகிறார்கள்; கேட்டு இன்புற்று நல்வழி நடவாமல், இவன், ஐயம் கொள்கிறான்—அலசிப் பார்க்கிறான்—தானாகச் சிந்தித்துப் பார்க்கிறான்—பெரியோர்களே! எத்துணை பேய்க்குணம் இவனுக்கு! காலம் இப்படியுமா கெட்டுப்போகவேண்டும் நமக்கு அமைந்துள்ள நல்லாட்சியில், எதைப் பற்றியும் நாமாகவே எண்ணிப்பார்த்து உண்மையை உணர்ந்திடும் தொல்லையைத் துளியும் நமக்குத் தராமல், நமது அரும்பெருந் தலைவர்கள் அயராது உழைத்து, எண்ணங்களைச் சமைத்தெடுத்துச் சுவைபடத் தருகின்றனர்! தொட்டிலிலிருந்து சுடுகாடுவரையில், நமக்குத் துணையாக, நமது தலைவர்கள் தயாரித்துத் தருகிற, 'உபதேசம்' இருக்கிறது. வீட்டிலே இருந்தாலும் அலுவலகம் சென்றாலும், எங்கே இருந்தாலும், துளியும் கஷ்டமின்றி, எல்லாவற்றைப்

பற்றியும், நாம் என்ன எண்ணவேண்டுமோ அதனை, ஆட்சியில் அமர்ந்துள்ள புண்ய புருஷர்கள், தயாரித்துக்கொடுக்கிறார்கள் — ஆனால் இவன், இந்தக் கொடியவன், நம் தலைவர்களின் பேச்சைக்கூடத் துச்சமென்று கருதுகிறான்— சுயமாகச் சிந்திக்கிறான். நாடு செய்த தவத்தின் நற்பயனாகக் கிடைத்துள்ள நமது தலைவர்கள், ஏதேனும் கூறினால், ஆர அமர யோசித்துப் பார்த்தறிந்த உண்மையாகத்தானே இருக்கும்; நமது நல்வாழ்வுக்கானதாகத்தானே இருக்கும்! நன்றியுடன் அதனை ஏற்றுக்கொள்ளாமல், இவன், அவர்கள் சொல்வது சரியா, தவறா என்று சிந்திக்கிறான்! இவன்!! நமது தலைவர்களை விட இவனுக்குச் சிந்தனா சக்தி அதிகமோ! எவ்வளவு கடைந்தெடுத்த கயவனாக இருந்தால், இவன், தலைவர்கள் பேச்சைப்பற்றி, ஆராயத் துணிவான்! உம்! இருக்கட்டும்!! ஏ! கெடுமதியாளனே! குற்றத்தை ஒப்புக்கொள்கிறாயா? மறுக்கிறாயா?

கைதி:- குற்றத்தை ஒப்புக்கொள்கிறேன்.

நீதி:- நாட்டுக்கு நாசம் விளைவிக்கும் இந்தத் துரோகத்தைச் செய்ததாக ஒப்புக்கொள்கிறாய்?

கைதி:- சுயமாகச் சிந்தித்தேன்-ஒப்புக்கொள்கிறேன், குற்றத்தை.

தொடுப்:- நமது அரசு நமக்காகச் செய்துள்ளவைகளை மறந்து, துரோகம் செய்கிறாய்?

கைதி:- மறந்ததால் அல்ல! நமக்காக நமது அரசு செய்வதை எல்லாம் கண்டதால், நானாக எண்ணிப்பார்த்து உண்மையைக் கண்டறிய விரும்பினேன்.

தொடுப்:- சட்டத்தை மீறுகிறாய்-தெரிகிறதா உனக்கு.

கைதி:- கூறுகிறீர்களே! தெரிகிறது! ஆனால், எந்தச் சட்டத்தை நான் உடைக்கிறேன்?

தொடுப்:- எந்தச் சட்டமா? நாட்டை வாழவைக்க, நமது தலைவர்கள் இயற்றிய சட்டம்.

கைதி:- நாட்டை வாழவைக்கவா? வாழ்கிறதா, நாடு! வாழ்க்கையா நாம் நடத்துவது...?

நீதி:- குழப்பமோ இவனுக்கு மனதில்...

கைதி:- ஆமாம்... குழப்பம்...

நீதி:- ஏன் ஏற்படுகிறது?

கைதி:- தானாக ஏற்படவில்லை. ஒருவன் புகுத்துகிறான், என் உள்ளத்தில்...

நீதி:- யார் அவன்? தேவதையோ?

கைதி:- தேவதை என்றுதான் முதலில் எண்ணிக்கொண்டேன். பிறகு தெரிந்தது, தேவதை அல்ல—பிசாசுக்குட்டி! என்று.

நீதி:- குட்டிப்பிசாசா...?

கைதி:- ஆமாம்! ஓயாமல் என்னைப் பிடித்தாட்டுகிறது அந்தக் குட்டிப் பிசாசு! நான் மேலங்கி அணிந்தோரை மேதாவிகள் என்று எண்ணும்போது, காவி தரித்தோரைக் கடவுளின் அடியவர்கள் என்று நினைக்கும்போது, பத்திரிகைகளை அறிவை அளித்திடும் அற்புதப் பணிபுரியும் திருத்தூதர்கள் என்று கருதும்போது இந்த குட்டிப்பிசாசு, உள்ளே புகுந்து குடைகிறது! குத்திக் கிளறுகிறது, என் சிந்தனையை! எல்லாம் ஏமாற்று வித்தை, தெரியவில்லையா? என்று கேட்கிறது. புரட்டு, விளங்கவில்லையா? எண்ணிப்பார்! என்று கூவித் தூண்டுகிறது.

நீதி:- உன் கண்ணால் கண்டாயா அந்தக் குட்டிப் பிசாசை... எங்காவது?

கைதி:- எல்லா இடத்திலும் காண்கிறேனே! இங்கும் இல்லை என்று எப்படிக் கூறமுடியும்?

[சிரிப்பொலி கேட்கிறது. சிறியதோர் உருவம் வருவது தெரிகிறது. கைதியிடம் சென்று குலவுகிறது.]

[தம்பி! குட்டிப் பிசாசு என் உள்ளத்தில் புகுந்து, என்னைச் சிந்திக்கவைக்கிறது, என்று கைதி கூறியதாக, நூலெழுதியவர் எடுத்துக்காட்டுவதிலே தனியானதோர், சுவை இருக்கிறது. சிந்தனை என்பதை நம்பிக்கைக்கு நாசம் விளைவிப்பது என்று எதேச்சாதிகாரிகள்—மத ஆதிக்கக்காரர்கள் கூறிவருவர்.

நம்பிக்கை என்பது கடவுள் ஊட்டுவது என்றும், சந்தேகம், சிந்தனை, இவை கள் 'சாத்தான்' ஏவிவிடுவன என்றும் தேவாலயத்துக் கோமான்கள் கூறுவர்.

நம்பிக்கை, அடக்க ஒடுக்கத்தைத் தரும்; சிந்தனை, துணிவை, தன்னிச்சையாக நடந்திடும் போக்கினை மூட்டிவிடும் — கடவுளின் ஆற்றலை அலைக்கழிக்க சாத்தான் செய்திடும் சூழ்ச்சியாகும், அந்தச் சிந்தனை; என்று கூறிவந்தனர், ஜெபமாலையின் துணையைச் செங்கோலுக்கு அளித்து அரசோச்சி வந்தவர்கள். அந்த நிலையைச் சுவைபட எடுத்துக் காட்டத்தான் சிந்தித்தான் என்று குற்றம் சாட்டப்பட்டவன், தன் சிந்தனைக்குப் பொறுப்பு, தானல்ல, ஒரு குட்டிப் பிசாசு என்று குத்திக்காட்டிப் பேசுகிறதாகக் குறிப்பிட்டிருக்கிறார்.]

நீதிபதி:- வழக்குத் தொடுப்போரே! குற்றவாளியின், மனம் குழம்பிக்கிடப்பதற்கு, மருத்துவர் சான்றளிக்க வருவாரா?

தொடுப்:- மருத்துவத் துறைத் தலைவர் வந்திருக்கிறார்; குற்றவாளி மிகப் பயங்கரமான, பைத்தியக்காரன் என்பதை எடுத்துக்கூற, அனுப்பப்பட்டிருக்கிறார்!

நீதி:- சரி! மருத்துவ நிபுணரை அழைத்து வாரும்...

[நீதிபதியை டெலிபோன் அழைக்கிறது. பேசி முடித்ததும்.]

நீதி:- குற்றவாளியே! உன ஆணவம், அறிவீனம், அரசுக்கு நீ இழைத்த துரோகம், அதை வெளிப்படையாக ஒப்புக்கொண்டு பேசிய மண்டைக்கர்வம், ஆகியவை பற்றிப் பல பக்கங்கள் விரிவாகவும் விளக்கமாகவும் எழுதி, உன் மனைவி மக்களுக்குத் தரப்படும்—படித்திட—பாடம் பெற்றிட. இப்போது, எழுத நேரமில்லை. துரிதமாக நடவடிக்கை எடுத்தாகவேண்டும். போலீஸ் காவலர்காள்! குற்றவாளியைப் பிடித்திழுத்துச் சென்று தூக்கிலிட்டுக் கொன்றுபோடுங்கள்.

[கைதியைப் போலீஸ் அதிகாரிகள், இழுத்துச் செல்கிறார்கள். வழக்கு முடிந்தது! நீதி வென்றது! குற்றவாளிக்குத் தூக்குத் தண்டனை! என்ற செய்தியைக் குறிப்பெடுப்போன், இதழுக்கு அறிவித்துவிடுகிறான்.]

தொடுப்:- பெருந்தகையே! ஒரு விஷயம்—சிறிய விஷயந்தான—எனினும், செய்வன திருந்தச் செய் என்பார்களல்லவா? அதற்காக...

நீதி:- செய்யவேண்டியதைச் செய்தாயிற்றே!...

தொடுப்:- முடிவு சரியானதே! முறையிலே, ஒரு சிறு குறை! குற்றவாளிக்கு மரண தண்டனை விதிக்கு முன்பு, மருத்துவ நிபுணரின், சான்று பற்றிக் குறிப்பிட்டீர்கள். அவர் வருவதற்குள்...

நீதி:- அவர் வந்திருந்தாலும், முடிவு இதேதான்! சரி!

அதனு... ...ன்? ...வாளி இறந்துபடுகிருன் என்பதால், நாம் முறையிலே குறைவைப்பானேன்! மருத்துவ நிபுணரின் கருத்தினைக் கேட்டறிவோம்—இப்போது.

[மருத்துவ நிபுணரின் கருத்தறிந்து, குற்றவாளி, பித்தனு அல்லவா என்பதைக் கண்டறியத்தான், 'முறை' வகுத்தார், நீதிபதி.

ஆனல், டெலிபோன் மூலம், அவருக்கு ஆணை பிறந்துவிட்டது--ஒருவனுக்கு மரண தண்டனை விதிக்க இவ்வளவு நேரம் பிடிக்கவேண்டுமா? என்று கேட்டுவிட்டார், 'மேலோர்'. ஆகவேதான், தீர்ப்பைத் தந்துவிட்டு, முறையைக் குறையுள்ளதாக்க வேண்டாம் என்பதற்காக மருத்துவ நிபுணரை அழைத்துப் பேசவைக்கிருர் நீதிபதி.]

தொடுப்:- செத்தொழிந்தானே குற்றவாளி, அவன் உயிரோடு இருந்தபோது புத்தி தடுமாருது இருந்தானு, பித்துப்பிடித்துக் கிடந்தானு?

மருத்:- பொல்லாத பைத்யக்காரனுகத்தான் இருந்தான்.

நீதி:- மூளை கெட்டுவிட்டிருந்ததோ?

மருத்:- ஆமாம்...

நீதி:- மூளை, நோயினுல், கெட்டுவிட்டதோ?

மருத்:- ஒரு கிருமி-நச்சுப் பூச்சியினுல், மூளை கெட்டுக் கிடந்தது.

நீதி:- அதை, எடுத்துக்காட்ட முடியுமா, ஆதாரத்துடன்?

மருத்:- ஆதாரம் அப்பழுக்கின்றி இருக்கிறது. செத்தொழிந்தானே, அவனுடைய மூளையைக் கெடுத்த, அந்த நஞ்சுப் பூச்சி, புத்தம் புதியதல்ல. அது, இக்காலத்தைவிட, ஆன்ருேர்கள் காலத்தில், மிக அதிக அளவிலே இருந்ததுண்டு. பழம்பெரும் நகரான ஏதன்சில், இந்தப் பூச்சிகள் ஏராளமாகக் கிடந்தன! பாலஸ்தீன் நகரிலே கூட! ஐரோப்பிய பூபாகத்தில், இந்தப் பூச்சியைக் கசக்கியும் நசுக்கியும் வைத்தனர். முன்பு இருந்த அளவுக்கு, அவைகளின் தொல்லை இப்போது கிடையாது. கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது.

தொடுப்:- அந்த நஞ்சுப் பூச்சி தீண்டி நோய் கண்டுவிட்டால், நோய் என்றென்றும் போகாதோ?

மருத்:- ஒருக்காலும், நோய் போகாது.

தொடுப்:- நோயின் குறிகள் யாவை?

மருத்:- கண்களிலே புத்தொளி, சுறுசுறுப்பான நடவடிக்கை, எளிய வாழ்க்கை, அச்சமற்ற போக்கு, சுகபோகத்தில் பற்று அற்ற நிலை.

தொடுத்:- கொல்லப்பட்டானே, அவனிடம் இந்தக் குறிகள் கண்டீரா?

மருத்:- அதை ஏன் கேட்கிறீர்கள்! நோய், முற்றிப் போன நிலை அல்லவா, அவனுக்கு.

நீதி:- அப்படியானல், அந்த நோயாளி கொல்லப்பட்டது, சமூகத்துக்கு மிகப் பெரிய நலன் தரும் செயல்—அல்லவா?

மருத்:- ஐயமென்ன! ஐயமென்ன!!

[குற்றவாளியைக் கொல்லப்பார்க்கிருர்கள்! அவனைச் சாகடிக்க முடியவில்லை. ஓடோடி வந்து, நீதிபதியிடம் கூறுகிருர்கள். அவர் பதறுகிருர். ஆணையிடுகிருர்! ஆர்ப்பரிக்கிருர். வெட்டு குத்து! கொளுத்து! பிய்த்தெறி! எதையோ, செய்! ஆனல் அவன் சாகவேண்டும்! என் தீர்ப்பு நிறைவேற்றப்படவேண்டும்! என்று கூச்சலிடுகிருர். காவலர், வெளியே செல்கின்றனர்.]

நீதி:- (கிலிகொண்ட நிலையில்) மருத்துவ நிபுணரே! இந்த நோய், தொத்திக்கொள்ளக்கூடியதோ?

மரு:- பொல்லாத தொத்து நோய்! ஏதன்ஸ் நகரிலிருந்து அந்த நோய், பரவிப் பரவி, ஐரோப்பிய பூபாகத்தையே கப்பிக்கொண்டது. நமது நாகரிக நகர்களில், 'மாற்று மருந்துகளை' ஆட்சியாளர் தயாரித்து அளிப்பதால், நோய் பரவுவது தடுக்கப்பட்டு வருகிறது.

நீதி:- கிடக்கட்டும். குற்றவாளி இங்கு வந்திருந்தானே—தொத்துநோய் என்கிறீரே—நம்மைப் பிடித்துக்கொண்டிருக்குமோ?

மரு:- இருக்கும்.

நீதி:- அவன் உயிருடன் இருந்தால்தானே, நோய் தொத்திக்கொள்ளும். அவன்தான் செத்தானே!

மரு:- ஐயோ! ஆபத்து அப்போதுதான் அதிகம். அப்படிப்பட்டவர்களின் சக்தி உயிரோடு இருந்தபோது இருப்பதைக் காட்டிலும் செத்த பிறகு அந்தச் சக்தி பலமடங்கு அதிகமாகிவிடும்.

நீதி:- நோயை நீக்க, வழியே இல்லையா......?

மரு:- இருக்கிறதே! தாங்கள் கண்டவழி! சாகடிப்பது!!

நீதி:- என்ன, மருத்துவ நிபுணரே! ஒரு தினுசாகப் பேசுகிறீர்.

மரு:- உண்மையை உரைக்கிறேன்! பெருந்தகையே! என்னை அந்த நோய் தொத்திக்கொண்டது!

தம்பி! மருத்துவ நிபுணருக்கு, தன்னை வரவழைத்துக் கேட்டு, உண்மை என்ன என்று கண்டறியாமலே, குற்றவாளிக்கு நீதிபதி மரண தண்டனை தந்ததால் மனம் கொதித்திருக்கிறது.

சட்டத்தையும் ஒரு பக்கம் ஏடுகளாக்கி வைத்துக்கொண்டு; படுகொலையை நீதிபதி செய்கிருரே! ஆட்சி இதனை அல்லவா, முறையாக்கி வைத்திருக்கிறது, என்று எண்ணுகிருர்—அவர் உள்ளத்தில் உறங்கிக் கிடந்த, நேர்மை எழுந்து நின்று, அவரை ஆண்மையாளராக்கிவிடுகிறது. அஞ்சாது உண்மை பேசுருர். இறந்தவன் மூளையைக் கெடுத்தது, ஒரு நச்சுப் பூச்சி—அது கிரேக்க நாட்டில் ஏதன்ஸ் நகரிலே நிரம்பி இருந்தது என்று மருத்துவர் கூறுவதன், உட்பொருள், கொடுங்கோலர் செய்யக்கூடிய கொடுமைகளுக்கு அஞ்சாமல், நெஞ்சுரத்துடன் சிந்தனையாளர், ஏதன்ஸ் நகரில் நிரம்ப இருந்தனர்—அவனி எங்கும் அறிவு பரப்பினர்—சர்வாதிகாரிகளின் காலத்திலேதான், சிந்தனையைச் சாகடிக்க முயற்சிக்கிருர்கள்—அதுவும் நடவாது என்பதாகும்.

சிந்தனையாளர், கொடுங்கோலரின் சீற்றத்தால் தாக்கப்படுவது காணும்போது, எவருக்கும் அவர்பால் பற்று ஏற்பட்டுவிடும்—சிந்தனையாளர் ஆகிவிடுவர், என்ற கருத்தை விளக்கத்தான், குற்றவாளிக்கு இருந்தது, தொத்துநோய், என்று கூறினர்.

அநியாயமாக ஒருவனை அழிக்கிறீர்கள், அவன் ஆன்ருேர் காலமுதல் அழிந்துபடாமல் இருந்துவரும் 'சிந்தனை'ச் செல்வத்தைப் பறிகொடுக்க மறுத்த காரணத்தால்—அவன் சாகத் துணிகிருன், சிந்தனையை இழக்க மறுக்கிருன்—அவனன்ருே ஆண்மகன்—அவன்போல் அனைவரும் இருந்திடவேண்டும்—இதோ இனி நான், அவன் போலத்தான்! என்ற கருத்தை விளக்கத்தான் அந்த மருத்துவ நிபுணர், என்னையும் அந்த நோய் தொட்டுவிட்டது என்று கூறினர்.

பதறிய நீதிபதி, மருத்துவ நிபுணரைக் கைது செய்யும்படி, போலீஸ் அதிகாரிக்குக் கட்டளையிடுகிருர். அவனும் மறுத்துவிடுகிருன்! தொத்துநோய்!!

வழக்குத் தொடுப்போனைக் கூவி அழைக்கிருர் நீதிபதி. அவன் மட்டும், என்ன!! நாம் நடத்தியது வழக்கு விசாரணை அல்ல! கேலிக்கூத்து! நான் ஓர் சுயநலக்காரன்—போலீஸ் காவலர், விசை கொடுத்தால் ஆடும் பதுமை—செய்தி தருவோன் பொய்யன், புரட்டன்—தாங்களோ, ஓர் கோமாளி!

பிடியுங்கள்! அடையுங்கள் சிறையில்! கொல்லுங்கள் துரோகியை!—என்று ஆத்திரத்துடன், நீதிபதி அலறுகிருர்.

சட்டம் படித்தேன், பகலும் இரவும்! எதற்கு' பாதகம் புரிந்திட! படுகொலைக்கு உடந்தையாக இருக்க!! உண்மையை உணருகிறேன். உயிர் பெரிதல்ல! வாழ்க்கை பெரிதல்ல! நாம் இப்போது வாழ்ந்துகொண்டும் இல்லை!—என்று உருகிப் பேசுகிருன், வழக்குத் தொடுத்தோன்.

பொய்! பொய்! நான் இதுவரை, வெளியிடச் சொல்லி அனுப்பிய அவ்வளவு செய்தியும் அண்டப் புளுகு' நாங்கள் மனிதர்களே அல்ல! மானமற்றவர்கள்! மதியற்றவர்கள்! கதியற்றவர்கள்! இங்கு ஒரே ஒரு மனிதன் இருந்தான்—குற்றவாளிக் கூண்டில்! ஒரே ஒரு விடுதலை வீரன் இருந்தான்—கரங்களில் விலங்குகள் பூட்டப்பட்டு! மற்றவர் அனைவரும், மாமிசப் பிண்டங்கள்! மனிதக் கழுகுகள்!

இவ்விதமெல்லாம் செய்திதருகிருன், இதழுக்கு—நோய் முற்றிவிட்டதில்லை அவனுக்கு.

நீதிபதிக்கும், இலேசாக நோய் பிடித்துவிடும் போலாகிறது.

ஆனல், டெலிபோன் ஒலி கிளம்புகிறது! 'மேலவர்' பேசுகிருர்—நீதிபதி பதறுகிருர்.

"நச்சுப்பூச்சி தீண்டியதால், இங்கு அனைவருக்கும் திடீர் என்று நோய்கண்டுவிட்டது. இப்போது பரவாயில்லை. இதோ தொடர்ந்து நடவடிக்கை எடுத்துக்கொள்கிறேன்!" என்று கூறிவிட்டு, மற்றவர்களை அழைக்கிருர்.

பிள்ளை குட்டிகளைக் கவனியுங்கள்! பிழைப்பைக் கெடுத்துக்கொள்ளாதீர்கள்! மேலவர் மெத்தக்கோபத்துடன் இருக்கிருர். இடிமுழக்கம்போலிருந்தது அவர் பேச்சு. எந்த நேரத்திலே ஆபத்து வருமோ, தெரியவில்லை."

நீதிபதி பீதிகொண்டதுபோலவே, மற்றவர்களும் பீதி அடைகிருர்கள்.

குட்டிப் பிசாசும் கொல்லப்பட முடியாதவனும் கூடுகின்றனர்.

வழக்குமன்றத்திலிருந்தோர், வதைபடுவதைக் காட்டுகிறது குட்டிப்பிசாசு!

நடைப்பிணங்களைப்பார்! நடுங்கிக்கிடக்கும் பேர்வழிகளைப்பார்! நத்திப்பிழைத்திடும் சிற்றினத்தைப் பார்!—என்றெல்லாம் கூறிக் கேலிசெய்கிறது, குட்டிப் பிசாசு!

இவர்போன்ருர் தானே, ஆட்சி மன்றங்களிலே மிகப் பெரும்பாலோராக உள்ளனர், என்று கேட்கிருன், மரண தண்டனை பெற்றும், உயிர் இழக்காதவன்.

இவர்கள் இப்படியேதான் இருப்பார்களா? என்று கேட்கிருன், சிந்தித்தவன்.

ஆமாம்! என்று பதிலளிக்கிருன். சிந்திக்கச் செய்தவன்.

எப்போதும் இப்படியேதானு? என்று கேட்கிருன் சிந்தனையாளன்.

நெடுங்காலத்துக்கு இப்படித்தான்! நடைப்பிணங்கள் மனிதத்தன்மை பெறுவது மிகக் கடினமல்லவா? என்று கூறிச் சிரிக்கிருன்; சிந்திக்கவைத்தவன்.

நீதிபதியின் இருக்கையில், அமருகிருன், முன்பு குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப்பட்டவன்!!

•

தம்பி! சர்வாதிகாரிகள், நீதிமன்றத்தை எப்படிக் கேலிக்கூத்தாக்குவார்கள் என்பது மட்டுமல்ல, நாடகக் கருத்து—எப்படிப்பட்ட மோசமான சர்வாதிகார ஆட்சி நடந்தாலும் ஒருவர் இருவராகிலும் துணிந்து 'சுயசிந்தனை' செய்து, அதன் காரணமாகக்கொடுமைப் படுத்தப்பட்டாலும் தாங்கிக்கொள்வர் 'என்ற பேருண்மையையும் நாடகம் விளக்கிக்காட்டுகிறது.

கொடுமைக்கு அஞ்சாமல் ஒருவன், விடுதலை வீரனுகத் திகழ்ந்தால், முன்பு மரக்கட்டைகள்போலிருந்தோரும், உணர்ச்சி பெற்று, உரிமைக்காகப் போரிடும் வீரராவர். என்பதும், நாம்பெறவேண்டியபாடம்.

•

ஆனல், சர்வாதிகாரிகள்போலவா நமது அரசு, எண்ண, எழுத, பேச, கேட்க, உரிமைதாராது இருக்கிறது, என்று காங்கிரசார் கேட்பர், குறும்புச்சிரிப்புடன். பெரிய தலைவர்களேகூடச் சில வேளைகளில், மார்தட்டிக்கொண்டு பேசுகிருர்கள், "நாங்கள் அல்லவா பேச்சுரிமை கொடுத்தோம்!" என்று. இன்னும் சிலர், எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசும் போக்கினர், "நாங்கள்மட்டும் நினைத்திருந்தால், உங்களை ஒழித்துக்கட்டிவிட்டிருப்போம். போனல் போகட்டும் என்று விட்டுவைத்திருக்கிரும், என்று கொக்கரிக்கிருர்கள்.

இவர்கள் அளித்துள்ள பேச்சுரிமை, எத்தனை எத்தனை வளையங்கள் போடப்பட்டதாக இருக்கிறது என்பதுகூடக் கிடக்கட்டும் — பேச்சுரிமையை இவர்கள், கொடியவன் என்று கண்டிக்கப்பட்ட வெள்ளையன் காலத்திலே பெற்றுச் சுவையைக் காணவில்லையா?

சிங்கத்தின் குகையிலே நுழைந்து, அதன் பிடரியைப் பிடித்தாட்டுவேன்! என்று பேசிடச், சத்தியமூர்த்திக்கு வெள்ளைக்காரன், உரிமைதந்தான்—நேருவுக்குக் கருப்புக்கொடி இன்னின்ன கட்டுத்திட்டத்தோடுதான் காட்டவேண்டும் என்று கழகத் தோழர்களுக்குக் கூறிட, கூட்டப்பட்ட கூட்டத்தில் பேசிடும் உரிமையையும் தரமறுத்து, வழியிலேயே மடக்கிப் பிடித்துக்கொண்டுபோய், போலீஸ் கொட்டடியில் நம்மை அடைத்தவர்கள், இவர்கள். இவர்கள் பேசுகிருர்கள், பேச்சுரிமையை நமக்குத் தாராளமாகத் தந்திருப்பதாக!

•

சர்வாதிகாரி, பேச்சுரிமை தரமாட்டேன் என்று அறிவித்துவிடுகிருன் — காங்கிரஸ் ஜனநாயகவாதிகளோ, பேச்சுரிமை தந்திருக்கிரும் என்று கூறிக்கொண்டே, எதிர்க்கட்சிகளின் நடவடிக்கைகளை நசுக்க, நானுவிதமான முறைகளைத் தொடர்ந்து நடத்தியபடி உள்ளனர். எதிர்க்கட்சிகள் எடுத்துக்காட்டும் 'குற்றம் குறைகளுக்கு' தக்கவிதத்தில், மறுப்புரை கூருமல், நாட்டு மக்களிடம் சென்று, எல்லா எதிர்க்கட்சியினரும், நாசகாரர்கள், நாட்டுத் துரோகிகள், அறிவற்றவர்கள் என்றெல்லாம் ஏசித் திரிகின்றனர்.

தம்பி! கனம். காமராஜரே, பேசுகிருர், தி. மு. கழகத்தவர், அரசியல் அப்பாவிகள் என்று. இவர் ஈராறு ஆண்டுகள். அகில உலகப் பல்கலைக்கழகத்திலே அரசியல் பெரும்பேராசிரியராகப் பணியாற்றிப் பக்குவம் பெற்றவர்போலவும், சீனத்து மாசேதுங்கும் சோவியத்நாட்டு குருஷேவும, அமெரிக்க அயிசனேவரும் பிரிட்டிஷ் மாக்மிலனும், இவரிடம் பாடம் கேட்டுப் பயிற்சி பெற்ற மாணவர்கள்போலவும், எண்ணிக்கொண்டாரோ, என்னவோ, நம்மை, அரசியல் அப்பாவிகள் என்கிருர்.

கிராமத்துப் பெரியதனக்காரர், வெட்டிய கிடாவின், இறைச்சித் துண்டுகளை, இன்னின்னாருக்கு இவ்வளவு என்று எடுத்துவைக்கச் சொல்லிக்கொடுத்தனுப்புவதுபோன்ற அலுவல், இவருக்கு, காங்கிரஸ் அரசியலில்! இவருடைய 'அபாரமான' ஆற்றலுக்காக, இவரைத் தேடிக்கண்டுபிடித்து, நேரு பண்டிதர், முதலமைச்சர் ஆக்கிவைத்தது போன்ற ஒரு மனமயக்கம்போலும், இவருக்கு!

திராவிட இன உணர்ச்சி மலர்ந்துள்ள இடத்தில், ஆச்சாரியார் போன்றார் ஆட்சியில் அமர்ந்திருப்பது அமளிக்கு வழிகோலும் என்ற அச்சத்தால், திராவிட இனத்தவராகவும், அதேபோது அந்த உணர்ச்சியை அறிந்துகொள்ளத்தக்க அறிவாற்றல் அற்றவராகவும் ஒருவர் கிடைத்தால், அவரைப் பிடித்திழுத்து, தலையில் மகுடத்தைக் கவிழ்த்து உட்காரவைத்தால், நாட்டிலே அமளி மூளாதிருக்கும், என்பதன்றி பிறிதோர் நோக்கத்தை நேரு பெருமகனாரும் கொண்டிருக்க வழி இல்லை!

இவர் நம்மை ஏசுகிறார், அரசியல் அப்பாவிகள் என்று!!

நடுநிலையாளர், இங்ஙனம் எதிர்க்கட்சியினரை முறை தவறி ஏசுவதும், முரட்டுத்தனமாகத் தாக்குவதும், சரியல்லவே! என்று கூறும்போது, கோபம் கொப்பளிக்கிறது, காங்கிரஸ் ஜனநாயகவாதிகளுக்கு.

"ஓ! ஓ! யார் தெரியுமா நாங்கள் வெள்ளைக்கார ஏகாதிபத்தியத்தை விரட்டிய வீராதி வீரர்களாக்கும்! சுயராஜ்யம் பெற்ற சூரர்கள், அறிவீர்! சுயராஜ்யம் என்ன, விளையாட்டுக்காகப் பெற்றதாக எண்ணுகிறீர்களோ!!"—என்று எக்காளமிடுகின்றனர்.

தம்பி! கைதியாக்கப்பட்டிருக்கும், மெண்டாரிஸ், 'ஏனோதானோ' அல்ல!

பிறந்தது செல்வக் குடியில். விளைவு தெரியாமல் காரியமாற்றிடத் துடிக்கும் காளைப் பருவத்தினர் அல்ல. பிறந்தது 1899!! நான் பள்ளிக்கூடம் போனதே இல்லை, என்று கூறிக்கொண்டு, பல்கலைக் கழக பாதுகாவலர்களுக்கு 'அறிவுரை' கூறப் புறப்படும், அலங்கோலம் காண்கிறோமே, அதுபோல் அல்ல; மெண்டாரிஸ், பார் புகழும் ஓர் பல்கலைக் கழகத்தில் படித்தவர்.

1917ல், உதுமானிய சாம்ராஜ்யப் படையில் சேர்ந்து பணியாற்றியவர்.

உதுமானிய அரசு ஆறு நூற்றாண்டுகளுக்கு மேலாக அலங்கோல ஆட்சி நடத்தியதால் துருக்கி, 'ஐரோப்பாவின் நோயாளி' என்று பலராலும் நையாண்டி செய்யப்படும் நிலையில் கிடந்தது; அதுகண்டு வெகுண்டெழுந்து விடுதலைப்போர் நடாத்த முனைந்தார், கமால் பாஷா—மெண்டாரிஸ், அந்த வீரப்படையில் சேர்ந்து துருக்கிக்குப் புது வாழ்வு பெற நடத்தப்பட்ட, புனிதப் போரில் பெரும்புகழ் ஈட்டியவன்.

அழகிய ஆரணங்கை மணம் புரிந்துகொண்டு, மூன்று பிள்ளைகளுக்குத் தகப்பனாகி, செல்வ நிலையில் இருந்து வந்தான்—1931ல், கமால்பாஷா அவர்களே அழைத்து, மெண்டாரிசை அரசியல் அலுவலில் ஈடுபடச் சொன்னார்.

பாராளுமன்றத்திலே இடம் பெற்ற பிறகுங்கூட, முன் வரிசை நாடாமல், வாளா இருந்துவந்தார்.

1950ல், அவர் தலைமையில் கட்சி இயங்கி, தேர்தலில் ஈடுபட்டு, மகத்தான வெற்றி பெற்றது.

மிகப்பெரிய தேக்கங்கள் அணைகள் எஃகுத் தொழிற்சாலைகள், சுரங்கத் தொழில், எனும் பலவற்றைத் துவக்கினார்; துருக்கியின் செல்வம் வளரவேண்டும், பொருளாதாரம் பலப்படவேண்டும் என்பதற்காக.

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற தேர்தலில், பாராளுமன்றத்திலே **610** இடங்களில் **421** இடங்களை மெண்டாரிஸ் கட்சி பெற்றது!

அவ்வளவுதான்! ஆணவம் பிடித்துக்கொண்டது.

எல்லா எதிர்க்கட்சிகளும் ஒன்றாகக் கூடினாலும், நம்மை என்ன செய்ய முடியும், என்ற எண்ணம் தடித்தது. தடித்துப்போகவே, திட்டம் தீட்டும்போது எவரையும் கலந்து பேசவேண்டும் என்ற அக்கறை எழுவதில்லை—நிறைவேற்றுவதிலே நேரிடும் ஊழல்களை எவரேனும் சுட்டிக்காட்டினால், திருத்தவேண்டும் என்று எண்ணுவதில்லை; மாறாக, எதிர்க்கட்சிகளை ஏளனம் செய்தார்.

ஜெர்மன் நாட்டுப் பொருளாதார நிபுணர் எர்கார்டு என்பாரகூட, நிறையக் கடன் வாங்கி வாங்கித் தொழிலை நடத்துகிறீர்கள்—வருவாய் குறைவு;மிதமிஞ்சிய செலவு..இது ஆபத்து. நிர்வாகமும் ஒழுங்காக இல்லை!—என்று எடுத்துக் காட்டினார். தனக்கு இருக்கும் எண்ணிக்கை பலத்தினால், இறுமாந்து கிடந்த மெண்டாரிஸ், அந்த நிபுணர் பேச்சையும் துச்சமென்று கருதினார்.

அவனுக்கென்ன தெரியும்? இவனுக்கென்ன தெரியும்? இவன் வாலை ஒட்ட வெட்டிவிடுவேன்—அவனை அடியோடு அழித்துவிடுவேன்—என்றெல்லாம் பேசுவது, ஜனநாயகச் சர்வாதிகாரிக்கு ஏற்படும், நோயின் குறி!

அந்த நோய் பிடித்துக்கொண்டால், வேண்டுகோளைப் புறக்கணிக்கச் சொல்லும், நல்லுரையைக் கேட்க மனம் இடம் தராது, நாமே எல்லாம் என்ற நினைப்புப் புகுந்துகுடையும்!

தம்பி! நாம் கேட்கும் 'திராவிட நாடு' அமைத்துக் கொடுப்பது, அவ்வளவு எளிதானதல்ல, காமராஜருக்கு என்றே வாதத்துக்காக வைத்துக்கொள்வோம்; தமிழ் நாடு என்ற பெயர் வைப்பது கூடவா கடினமான காரியம்! அது என்ன, எவரெஸ்டுமீது ஏறிடுவதுபோன்றதா, இருக்குமிடமிருந்தே எங்கோ இருக்கும் இலக்கினைத் தாக்க ஏவிடும் வாணவெடி தயாரிப்பது போன்ற விற்பன்னர் வேலையா?

தேவையான அளவு தன்மான உணர்ச்சியும், மக்களின் வேண்டுகோளை மதிப்பது நமது கடன் என்ற பொறுப்புணர்ச்சியும் தானே தேவை—தமிழ்நாடு என்று பெயரிட! செய்தனரா?

'தமிழ்நாடு' என்ற பெயரிடும்படி, தி. மு. கழகம் மட்டுமா, கேட்கிறது? எல்லா அரசியல் கட்சிகளுமல்லவா!!

அரசியல் கட்சிகள் மட்டுமல்ல, கற்றறிவாளர் கழகங்கள், வணிகர் நடத்தும் மன்றங்கள், ஊராட்சி மன்றங்கள், புலவர் கழகம், தமிழாசிரியர் கழகம் — இவையாவுமன்றோ, தமிழ்நாடு என்ற பெயரிடும்படி வலியுறுத்தி வருகின்றனர்.

பம்மல் சம்பந்தனாரும், டாக்டர் மு. வரதராசனாரும், சேதுப்பிள்ளை அவர்களும் எடுத்துக்கூறும்போது கூடவா, கனிவு எழாதிருப்பது?

எவர் சொன்னாலும் சரி, என் போக்கை மாற்றிக் கொள்ளப் போவதில்லை என்று இருப்பவரை என்னவென்று கூறுவது? பித்தர் என்பதா? சர்வாதிகார வெறி பிடித்தலைபவர் என்றுரைப்பதா? என்ன கூறினாலும் விளக்கம்பெற முடியாத மந்த மதியினர் என்பதா?

ஒரு பெரியவர், உண்ணாவிரதமிருந்து, சாகக்கண்டும், முதலமைச்சரின் மனம் இளகவில்லை! கண்டோமே!!

ஒருவர் சாகக்கண்டும் மனதை இரும்பாக்கிக்கொண்டாகிலும், கடமையைச் செய்யவேண்டும்—செய்தேன்—என்று கூறவாவது, காமராஜர் ஏதேனும் வியக்கத்தக்க சாதனைகளைச் செய்துகாட்டினாரா?

வேறு எதைச்செய்ய இயலாமற்போயினும், நடைபெறும் ஆட்சி, ஆளுங்கட்சியினருக்கேனும், திருப்தி அளிக்கிறதா?

தம்பி! அடுத்த கிழமை காட்டுகிறேன் அந்தக் கூத்தினை.

அண்ணன்,

அண்ணாதுரை

2-ம் பக்கத் தொடர்ச்சி



திறக்க ஓடினாள்......சாளரத்து வழியாகவந்த உருவம் "அம்மா வேண்டாம்......வேண்டாம்" என்று குரல்கொடுத்தது. திரும்பிப்பார்த்தாள். மன்னனின் மெய்க்காப்பாளன் வேலழகன் பதபதைப்போடு நிற்கக்கண்டாள்...பயம் அவளைச் சிலையாக்கியது.

"அம்மா தப்பி ஓடிவிடுங்கள்...தாமதிக்காதீர்கள். மன்னரைச் சிறைப்படுத்திவிட்டு உம்மையும், இம்மணி விளக்கையும் தேடிவந்திருக்கிறான் அமைச்சன் ஆலகாலன். தன் கத்தியை மன்னர் பரம்பரையின் இரத்தத்தில் கழுவவந்திருக்கிறான் அக்கொடியவன்...சீக்கிரம்...தப்பிச் சென்று இந்நாட்டு மக்களை அக்கொடியவனிடமிருந்து காப்பாற்ற முயற்சி செய்யுங்கள்......சீக்கிரம்...சீக்கிரம்..."

கேட்டாள்......மின்னலைக் கண்ட கண்கள் போலானாள். இதற்கிடையில் கதவு உடையும் போல் தெரிந்தது...துணிவு பெற்றாள்...துணைக்குக்கட்டாரி ஏந்தித், தூங்கும் தன செல்வத்தைத் தூக்கித் தோள்மேல் போட்டுக்கொண்டு இரகசிய வழியாய் மறைந்தாள்...கதவை உடைத்துக்கொண்டு உள்ளே வந்தனர் அமைச்சர் ஆலகாலனும், அவனைத் தொடர்ந்து படைத்தலைவன் நாகநாதனும்......அவர்கள் கைகளில் ஏந்திவந்த கூர்வாளினும் கூர்மையான கண்கள் அந்த அறையைத் தேடின.........மறைந்திருந்த மன்னனின் மெய்க்காப்பாளன் குறிவைத்தெறிந்தான் கட்டாரியை. ஆனால் ஆலகாலன் தப்பினான், நாகநாதனை இரையாக்கித், தன் சதிக்கு உடந்தையாய் இருந்த நாகநாதனைத் தானே கொன்றுவிடத் திட்டமிட்ட ஆலகாலன், தன் திட்டம் வேறுவிதமாக இவ்வாறு நிறைவேறியது குறித்து மகிழ்ச்சியுற்றான்......வேலழகனை கரங்களிலே விலங்கிட்டு "எங்கேயடா உன் காதலி திலகவதி?" என்றான்......

"தாயைப் பெண்டாளும் இனத்திற் பிறந்தவன் நான் இல்லையடா" என்றான் வேலழகன்.

"தாய்?......மகாராணி உனக்குத்தாயா? மன்னனுக்கு நீ மகன்? தேர்ப்பாகனின் மகன் என்று உலகம் உன்னை அழைக்கிறதே...... சேச்சே...எந்த முறையில் நீ மன்னனுக்கு மகன்? உன் தாய்க்கும் மன்னனுக்கும் தொடர்பா, அல்லது மகாராணி திலகவதியாருக்கும் உன் தந்தை தேர்ப்பாகனுக் கும் தொடர்பா"

"மூர்க்க நாயே...மூடடா வாயை"

"நாயா?......"

"இல்லையில்லை...அதுகூட நன்றியுள்ள பிராணியாயிற்றே"

"சீ...புதைகுழியின் பக்கத்தில் நின்றுகொண்டு பிதற்றாதே...மகாராணி எங்கே...சொல்..."

"இக்கேள்விக்குப் பதில் எதிர்பார்க்கிறாயா?"

"சொல்லமாட்டாய் என்று தெரியும்......உம்......நான் உலகத்திற்குச் சொல்லப்போவதைக் கேள். திலகவதிக்கும், மன்னனின் மெய்க்காப்பாளன் வேலழகனுக்கும் கள்ளக்காதல் இருந்து வந்தது..."

"அட பாவி...பத்தரைமாற்றுத் தங்கத்திற்கா மாசு கற்பிக்கப் பார்க்கிறாய்?"

"கேள் இன்னும்...இவர்களின் காதலுக்கு இடையூறாக விளங்கிய மன்னனை வேலழகன் வேறெங்கோ கடத்திச் சென்றுவிட்டான்..."

"ஐயோ...துரோகி..."

"அதுமட்டுமா......மன்னனை மறைத்துவிட்டு, மகாராணியோடு சதிசெய்துகொண்டிருந்த சமயம், அங்கு வந்த படைத்தலைவனைக் கொன்றுவிட்டான் வேலழகன்... மகாராணியை எங்கோ அனுப்பிவிட்டுத் தானும் தப்ப முயன்றான ......அப்போது நான் அவனைக் கைது செய்தேன்......மன்னனின் இருப்பிடத்தையோ, மகாராணியின் மறைவிடத்தையோ சொல்ல மறுக்கிறான்..."

"அற்பனே...உன் சூழ்ச்சியைப் பாராட்டுகிறேன்...ஆனால் இந்நாட்டு உலகம் ஏற்றுக்கொள்ள வேண்டுமே!"

"மறைந்துபோன மகாராணி; காணமற்போன கபோதி மன்னன் ...பிணமான படைத்தலைவன்......

இவைகளுக்கு அப்பால் என் வீரர்களின் சாட்சியம்......என் நாடகத்தின் வெற்றிக்கு வேறென்ன வேண்டும்? அப்புறம் உனக்குத் தண்டனை...!"

"மரணம்..."

"அதுதான் இல்லை...கண்களைக் குருடாக்கி சிறையிலே தள்ளி, சாட்டையால் அடித்து......இழுத்துச் செல்லுங்கள் இவனை"

ஆலகாலனின் ஆணைக்கு அடிபணிந்தது கூலிச்சேனை...அவனுடைய அறிவில் உதித்த கபட நாடகத்தை நம்பச்செய்தான் நாட்டினரை. நாடெங்கும் தனது ஒற்றர்களை நடமாடவிட்டுத் தனது நயவஞ்சக நாடகத்துக்கு ஆதரவு தேடினான்... அரண்மனை, அரவங்கள் நடமாடும் கூடம் என்பதை அறியாதவர் உண்மையென நம்பினர்...சந்தேகித்தவருக்குச் சன்மானங்கொடுத்துச் சரிசெய்ய முயன்றான் சதிகாரன்.....நம்ப மறுத்தவரை மரியாதையோடு அரண்மனைக்கு அழைத்து மரணப் பரிசளித்தான். அங்காடிக் கடைகளிலோ அன்றி அரசமரத்தடிகளிலோ உட்கார்ந்து ஆலகாலனுக்கு எதிராக ஒரு வார்த்தை சொன்னால் போதும் அவனது ஆட்களிடமிருந்து ஆபத்பாந்தவனால்கூடக் காப்பாற்ற முடியாது...சூழ்ச்சி நிறைந்த தனது நெஞ்சுக்குத் துணையாகக் குருதி தோய்ந்த கத்தியைக்கொண்டு ஆட்சிப்பீடமேறி அரசனானான். நஞ்சு நினைவுகள் சுரக்கும் தலையை மணிமகுடம் புனைந்து மறைத்தான்...செந்நிறக்கறை மறையாத கரங்களிலே செங்கோல்பற்றி, கொலைகளுக்கும் கொடூரச் செயல்களுக்கும் திரையிட்டான்.....சதிகாரன் என்று எவரும் சந்தேகிக்காதவாறு சரிகை ஆடைபூண்டு தன்னை மறைத்துக்கொண்டான். வேங்கி நாடு ஆலகாலனின் ஆணைக்கு அடிபணிந்தது.


தனது நிலைமை சிறிது சீர்பெற்றதும் வேந்தனின் கண்களைத் தோண்டிவிட்டு, இருட்டறையில் தள்ளிப் பூட்டினான். மெய்க்காப்பாளன் வேலழகனையும் குருடாக்கி அவனது நாவைத் துண்டித்து, சாட்டையால் அடித்து, அந்தப் புண்ணிலே காகமும் கழுகும் கொத்தித் தின்னும்படி கட்டிப்போட்டான். மன்னனிடம் விசுவாசம் காட்டியவர்கள் உடலெல்லாம் சல்லடைக்கண்களாயின சதிகாரனின் சவுக்கடியால்! எதிர்த்தவர்கள் குருதியிலே தன் கரங்களைக்கழுவி, அவர்களின் எலும்பின்மீது நடந்து அரசனை ஆலகாலனின் சதியை அறிந்தோர் சொற்பம்! அறிந்து அவனது கத்திக்கு அகப்படாது தப்பியோர் அதனினும் சொற்பம்!

*



ஆலகாலனிடமிருந்து தப்பிய திலகவதியை அரண்மனையின் இரகசிய வழி பயங்கரமான காட்டினிடையே கொண்டுவந்து சேர்த்தது ......உலகத்து நடவடிக்கைகளை வானத்தேயிருந்து காணும் வாய்ப்புப் பெற்ற வெண்ணிலவு திக்கற்றவளாய்த் திகைக்கும் திலகவதிக்குத் துணைபுரிந்தது. தோளிலே துவண்டுகிடக்கும் தேன்மொழியைத் தூக்கிக்கொண்டு, தள்ளாடித் தள்ளாடி நடந்தாள்—எங்கு போகவேண்டும் என்றறியாது, எங்கு போகிறோம் என்றும் தெரியாது, கால்போன போக்கெல்லாம் காட்டில் புதர்கள்விட்ட வழியெல்லாம் நடந்தாள். எதிர்பாராத நிலைக்கு எத்தனால் விரட்டப்பட்ட அவள் நெஞ்சம் புயல்சூழ்ந்த புழுதிக்களம்போலிருந்தது. எத்தனை எத்தனை இன்பக் கனவுகள் கண்டாள்...அத்தனையும் சூழ்ச்சி சுக்குநூறாக்கும் என்று எதிர்பார்த்தாளில்லை. இடதுகரத்தால் தோளில் தூங்கும் தேன்மொழியை அணைத்துக்கொண்டு, வலதுகரத்தால் வழியும் கண்ணீரைத் வழித்துத் துடைத்துக்கொண்டு நடந்தாள்...காலில் முட்கள் தைத்தன.......உணர்ந்தாளில்லை. ஆடையைப் புதர்முள் கிழித்தது........கவலை கொண்டாளில்லை! நடந்தாள் பயத்தால் விரட்டப்பட்ட பேதையாள். நடந்தாள்—பாதகனின் கரங்களுக்கு அப்பால் வந்தும் நடந்தாள்...முடியாத பாதையில் முடிந்தவரை நடந்தாள் அவள்...முடிவிலே மலையடிவாரம் கண்டாள்...சுமந்து வந்த சிறியாளை மடியிலே படுக்க வைத்தாள்........ வானத்தை நோக்கினாள்...... தன் வேலையை முடித்துவிட்டு மலையிடுக்கிலே மறையும் நிலவைக்கண்டாள்......நீள் மூச்சு விட்டாள்...'நிலவே, நீ உதயமாகும்போது உப்பரிகையிலே உல்லாசமாயிருந்தேன்......... இதோ நீ மறையும்போது மலையடிவாரத்தே அநாதையாக, உயிருக்குப் பயந்து பதுங்கி வாழவேண்டிய அபலையாகக் கிடக்கின்றேன்' என்றுபேதையவள் நெஞ்சம் எண்ணியதன்" விளைவோ, என்னவோ, நீள் மூச்சைத் தொடர்ந்து, நீர் மடை உடைந்தாற்போல் கண்ணீர் பெருகியது.

சிறிது நேரத்திற்கெல்லாம் கீழ்வானம் செந்நிறமாகியது. குருதிக் கடலில் குளித்தெழுவதுபோல் செவ்வானத்தே மெல்ல எழுந்தான் பகலவன்...மாலைக் கதிரவனை மாடியினின்றும் பார்த்தவள், காலைக் கதிரோனை மலையடிவாரத்தினின்றும் கண்டாள். திலகவதியின் கண்களினின்றும் வழிந்



தோடிய நீர்த்துளிகள் தேன் மொழியின்மீது பட்டு அவள் துயிலைக் கலைத்தது. விபரமறியாத அவ்விளை யாட்டு வீணை 'அம்மா' வென்று அழைத்தது. 'கண்ணே'யென்று அவளும் வாரியணைத்துக் கண்ணீரால் மகளை நனைத்தாள்...சம்மட்டி அடிபட்டுச் சிதறும் கண்ணாடிப் பாத்திரம் போன்று சதிகாரனால் சிதறுண்ட தன் குடும்பத்தை யெண்ணி யெண்ணி அழுதாள்...நரம்பறுந்த வீணையல்ல...நொருங்கிய வீணை அவள்...நம்பிக்கைக்கு வழியே இல்லாத சூழ்நிலைக்கு ஆளாக்கப்பட்ட அவள் எப்படித் தைரியம் கொள்வாள்? பஞ்சம் வந்து பாழான பூமியாக அல்ல...பூகம்பம் வந்து பிளந்துபோன தரையாயிற்றே அவள் வாழ்வு! கணவனின் நிலை யாதோ என்ற வேதனை வேறு உள்ளத்தை உறுத்தியவாறிருந்தது...துடித்தாள் துயரம் தாளாது துடித்தாள்,

"அம்மா, யார் நீ?" என்ற குரல் அவளை அதிர்ச்சியுறச் செய்தது... நிமிர்ந்தாள்...காவி உடை பூண்டு, கமண்டலம் கையிலேந்தி எதிரிலே வெண்தாடியோடு வயோதிகச் சாமியார் நிற்கக் கண்டாள்...மீண்டும் 'யார் நீ' என்ற குரல் கேட்டுக் குழந்தைபோல் கதறியழுதாள், தன் குலவிளக்கைத் தழுவியவாறே!

"அழாதேயம்மா...எழுந்து என்னோடு வா...வழி தவறி வந்திருந்தாலும், அனாதி வாழ்விழந்து வந்திருந்தாலும்நான் இருக்கின்றேன், உன் மனம் ஆறுதலடையும்வரை என் ஆசிரமத்தில் தங்கியிரு. நீ எங்கு போகவேண்டுமென்றாலும் நான் கொண்டுபோய்ச் சேர்க்கிறேன்...வா என்னோடு...அஞ்சாமல் வா...எழுந்திரு" என்ற முதுகிழவரைப் பின் தொடர்ந்து நடந்தாள்.

( தொடரும் )

# பெற்றவளே!

[ கதை ]

—பரி—

அதோ பாருங்கள். அவள் ஒரு அன்னை. அங்கே அவளைச் சூழ்ந்து நிற்கின்றார்களே, அவர்கள் எல்லாம் அவளுடைய மதலைச் செல்வங்கள். அதோ அந்தத் திண்ணைமீது சோம்பல் முறித்துக்கொண்டு உட்கார்ந்திருக்கின்றானே, ஒரு ஆள் — இருபத்து மூன்று வயது இளைஞன், அவன் மூத்த பிள்ளை. அவள் மடிமீது அமர்ந்து மழலை பேசிக்கொண்டிருக்கின்றானே ஒரு வாண்டுப் பையல், அவன் கடைக்குட்டி. பதினொரு குழந்தைகள் பெற்றுப் பெருவாழ்வு வாழ்கின்றாள் அந்தப் பேரன்னை என்கிறீர்களா? மறந்துவிடாதீர்கள் நாம் இருப்பது 'பாரதப் பண்பாடு' இருந்தராசாளும் அருமை — அடிமைத் திருவிடம் என்பதை.

அந்தப் பெற்றவள் பேயாய் அலைகின்றாள் பிழைக்கும் வழி காணாமல். "மாடாய் உழைத்து, ஓடாகத் தேய்ந்து, உருக்குலைந்து, உள்ளம் உடைந்து உன—என—செல்வச் சிறுவர்களைக் காப்பதற்கு நீ இருக்கும்போது நானும் இருக்கவேண்டுமா உன்னோடு? வேண்டாம்; நான் போகிறேன். பார்த்துக்கொள் நம் செல்வங்களை. அவர்களைப் பாராட்டிச், சீராட்டி, பாலூட்டி வளர்க்க முடியாவிட்டாலும், கூழூட்டி வளர்த்துவிடு. பெரியவர்கள் ஆக்கிவிடு. பார்த்துக்கொள். அதனையின் இந்த நாட்டுக்கு உரியவர்கள் நாங்கள் தாம் என்று, ஏறுநடை போட்டு எதிரியின் கொட்டமடக்கித் தங்கள் கொற்றத்தைக் காட்டி வெற்றி வீரர்களாகத் திகழ்வார்களோ, அல்லது யானங்காத்தான வழி வந்த மறத்தமிழர் குலத்துக்கே புல்லுருவிகளாய், பாரதப் பண்பாடுபற்றிப் பாடல்பாடி, ஆடல் ஆடி, அந்நியனின் அடிதாங்கி, கொடிதாங்கி, ஊரெல்லாம் நர்ணமற்றுச் சுற்றித் திரிகின்ற துரோகியராய்—தன்னினம் மாய்க்கும் வஞ்சகராய் மாறுவரோ,— அல்லது அவ்விரண்டு நிலைகளையும் தாண்டிக்கொண்டு உரிமை பெற்ற திராவிடத்தின் அருமை மக்களாக, அவர்தம் அன்னையாம் உன்பால் அளவிலா மகிழ்வும், அளவிலாப் பெருமையும், அளவிலாப் பூரிப்பும் பொங்கி வழிந்து, நாற்புறமும் தங்கிப் பெருகுமாறு நன்னிலையும், நல்வாழ்வும் ஒருசேரப்பெற்று உன்னை இறும்பூதெய்தச் செய்வரோ, பார்த்துக்கொள் என்று கூறுமற் கூறி, மாளாமல் மாண்டுவிட்டான் அவளுடைய ஆசைக் கணவன்.

அது சின்னஞ் சிறிய ஊர். அந்தச் சிறிய ஊரை விட்டால் அவளுக்கு வேறு புகலிடம் இல்லை. அங்குதான் அவள் இருக்கவேண்டும். அங்கிருந்தபடிதான் அவள் தன் மதலையரைப் பேணவேண்டும். காப்பாற்ற வேண்டும். அவள் எண்ணினாள். எப்படி வாழ்வதென்று தெரியாமல் எண்ணினாள். வேறொரு புகலிடமும் கிடைக்கவில்லை. ஆப்பக் கடை வைப்பதொன்றுதான் அவள் கண்முன்னால் தடம் விரித்துக் கிடந்தது—அவள் எண்ணத்துக்கு எட்டியது. யார் யாரிடமோ கெஞ்சினாள் அவள்; புரட்டாமல் புரட்டினாள். ஓர் ஐந்து ரூபாயைத்தான் அவளால் கடனாகத் திரட்ட முடிந்தது.

அவள் தொடங்கினாள் தன் தொழிலை, வாணிபத்தை. நடத்தது அதுவும் நல்லியது ஓரளவு

பதிவு எண். எம். 4642 — தொலைபேசி எண்.... அலுவலகம் 15 இல்லம் ...118

வருவாயை. அவள் மதலையர்— அந்த இருபத்து மூன்று வயது ஆளோடு சேர்த்துத்தாள்—அரை வயிற்றுக் கஞ்சி அருந்திக் கொண்டு வந்தனர். அவள் கால் வயிற்றுக் கஞ்சியை அருந்தாமல் அருந்தி, தன் மக்களுக்காக வாழாமல் வாழ்ந்துகொண்டிருந்தாள்; உடலோடு உயிரை ஒட்ட வைத்துக்கொண்டு நாட்களை ஓட்டிக் கொண்டிருந்தாள்.

சொல்ல மறந்துவிட்டேனே! முன்னொரு சமயம், அவள் கணவன இருக்கும்போது அவளுக்குச் சொந்த வீடு இருந்தது. அவர்களின் ஒரே ஒரு சொத்தாக நின்றதும் அந்த வீடுதான. கணவன் இருக்கும்போதுகூட அவர்கள் வாழ்வு வளமான வாழ்வாக அமையவில்லையே! துன்ப வாழ்வு தான் நடத்திக்கொண்டு வந்தார்கள். துன்பம நெருக்கி, அழுத்தி, வீழ்த்தப்போகும் சமயம எல்லாம் துணைவந்து நின்றது அந்த வீடு ஒன்றுதான். 'அந்த வீடுதான் எவ்வளவைத் தாங்கிக் கொள்ளும்? "பீலி பெய் சகடமும் அச் சிறும்" என்கிருர் வள்ளுவப் பெருந்தகை "அது சால மிகுத்துப் பெயின்" அளவுக்கு மீறிய இரும்புச் சுமை ஏற்றப்பட்ட கட்டை வண்டியின் கதி என்னுகும்? அச்சு வேறு. ஆணி வேருகச் சுக்கு நூருகிவிடாதா, என்ன? தாங்க முடிந்த மட்டும் தாங்கிக் கொண்டு வந்தது அந்த வீடு. அளவுக்கு மீறிய கடன் சுமை ஏறியதும், அது பொறுமையை இழந்துவிட்டது. 'இனி உங்களை எனனகத்தில் வைத்துக்கொள்ள மாட்டேன்; முடியாது என்று உரக்கக் கூவி, ஊரெல்லாம் கூட்டி [illegible]த்துக் கூறி அவர்களைப பிடர் [illegible] தள்ளி; [illegible] விரட்டாமல் [illegible], துரத்தாமல் துரத்தி, நடுத்தெருவில் நிறுத்தியே நிறுத்திவிட்டது.

அதன் பிறகு, இரக்கப்பட்டோர் சிலரின் உதவியோடு ஊக்கத்தைப் பெருந்துணையாக வைத்துக் கொண்டு, சிறுவர்களும், மனையாளும் சிற்றுதவிகள் புரிய, பாட்டை ஓரத்தில்—இப்போது அவர்கள் வதிந்து கிடக்கின்றுர்களே, அந்தச் சின்னஞ்சிறு குடிசை—அதனைக் கட்டி முடித்தான் அவளுடைய கணவன்.

அதன்பின் ஓராண்டு மட்டுந்தானே அவனும் இருந்தான், உயிரோடு அவளுடன். அவன மாண்டுகிடந்த சமயம் அவன் பெயருக்கு ஓர் அறிக்கை வந்தது; — அரசு அனுப்பிய அறிக்கை. "அரசுக்குச் சொந்தமான நிலத்திலே அவன் குடிசில் போட்டுவிட்டானும். அதற்கு அபராதம செலுத்தவேண்டுமாம். அந்தக் குடிசில் அங்கே நின்று கொண்டிருப்பதைப் பார்ப்பதறகுச் சட்டம் சம்மதிக்கவில்லையாம். சட்டத்தின் கண்களில் விழாமல் அதை அவ்வளவு நாள் மூடி மறைத்து வைத்ததே பெருந் தவறும். இனியும் அதைவிட்டு வைக்கமுடியாதாம். உடனடியாக அதைப் பிரித்துப் போட்டுவிட்டுத் தான் மறுவேலை பார்க்கவேண்டுமாம்" யாரோ சொன்னுர்கள்—அந்த அறிக்கையில் அப்படி எல்லாம் கூறப்பட்டிருக்கின்றதென்று—மாண்டு கிடந்த கணவனருகில் மூர்ச்சித்து வீழ்ந்து கிடந்த அந்த மலர்க்கொடியிடம். கட்டிய கணவன் சாவின் வாய்ப்பட்டுக் கிடக்கின்றுன். அவ்வேளை அவன் கட்டிய குடிசையைப் பிரித்துப் போடும்படி உத்தரவு.

"அதுவும சரிதான். தான கட்டிக் காத்துவந்த குடும்பக் கோட்டையையே தகர்த்துத் தரைமட்டமாக்கிவிட்டுப் போய் விட்டானே. அதன் பிறகு ஓலையாலும், மண்ணாலும் ஆன அந்தக் குடிசில் ஒரு பெரிதா என்று அரசு எண்ணியதோ என்னவோ!" —அங்கு நின்றோர் இரங்கல் உரை ஆடிக்கொண்டார்கள். துன்பக் கலக்கத்தில் அவள் எதையுமே உணரவில்லை.

மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு திரும்பவும் வந்துளது அந்த உத்தரவு 'மறுபிறப்பு' எடுத்து. முன்புபோல் சொல்லிவிட்டுப் போகவரவில்லை. செய்துவிட்டே போக வந்திருக்கின்றது. கூட ஆட்கள் வந்திருக்கிறார்கள். அரசு அனுபபிய—ஏவிய—ஆட்கள்.

"உன்மீது வழக்குத் தொடுக்கப் பட்டிருக்கிறது. நாளை அழைப்பு வரும் வழக்கு மன்றத்திலிருந்து. இத்தனை நாள் சட்டத்தை மட்டந் தட்டிக்கொண்டிருந்த இந்தக் குடிசிலை இப்போது நாங்கள் மட்டந்தட்ட வந்துள்ளோம். சட்டம் எங்களை அனுப்பியுள்ளது—ஏவியுள்ளது."

பேசினுன் வந்த ஆள். அவன் பினுல் நால்வர் கூடையும், மண்வெட்டியும், வைத்துக் கொண்டு நின்றுர்கள்.

"ஐயோ, எங்கள் உயிரின் உறைவிடமே இந்த ஓட்டைக் குடிசிலதனே! இதைத் தகர்த்து விட்டால் நாங்கள் தங்குவது எங்கே? உயிர் தரிப்பது எவ்வாறு?"

இப்படிக் கேட்கவில்லை அவள். வீழ்ந்துவிட்டாள் தரையில் அந்த உணர்வோடு.

ஐயோ, பெற்றவளே, பெற்றவளே! இந்தத் திருநாட்டுக் குடியாகப் பிறக்கப் பெற்றவளே!

காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.